A

பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர் றஹீம்.

இது,

நாயகம் செய்யிதினா அபுல் அப்பாஸ் கிழுரு
அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காரண
சரித்திரம் அடங்கியது.

பைஜுஸ்ஸலாம் பீஸீரதி
கிழுரு அலைஹிஸ்ஸலாம்.

இது,

நமது சென்னை இராஜதானியைச்சேர்ந்த
[illegible]ங்கர்ல ஷ்ரீசஞ்செய்யும் பு. ஹாபிஸ்மவுல்வி
காஜா முஹம்மது ஆலிம் சாயபு அவர்களால்
கோர்வை செய்யப்பட்டு,

அபுல்பஜல் பு. முஹியித்தின் சாஹெப் முயற்சியால்

சென்னை:
தருமச்[illegible]ன் ஆபீஸில்.
[illegible]

1920

Registered Copy Right.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

லை ஹுஸ்ஸலாம், பிஸ்ரீஷ், கிழுறு அலைஹிஸ்ஸலாம்.

முகவுரை.

அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து அவனுடைய றசூலாகிய நமது நாயகம் சர்தாரே றசூல் முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள்பேரிலும், அவர்களின் கிளைஞர் தோழர்மார்கள் பேரிலும், சலவாத்தும், சலாமும் சொல்லியபின்னர், அல்லாஹுத ஆலாவுடைய பொருத்தத்தைவிட ஆதரவுவைத்தவனுகிய கந்தூறிமாநகரில் வாசம் செய்யும் காஜா முகம்மது சல்லைஹூலக்கிநி என்பவன் சொல்லுவதாவது என்னவெனில், எனது அகத்தில் வெகுகாலமாய் நாயகம் அபுல் அப்பாஸ் கிழுறு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வைபோகத்தில் அழகான ரிசாலா வொன்று அறபி பார்சி ஹிந்துஸ்தானி இப்பாஷைகளை அறியாதவர்களுக்கு தமிழ்பாஷையில் எளிதாகும் வண்ணமாகக் கோர்வைசெய்ய வேண்டுமென்று நினைத்தபோது நான் அதற்குத் தகுதியில்லாதவனாயிருக்கிறதாலும் அல்லாஹுத ஆலாவின் கிருபையினாலும் கொடையினாலும் அவ்வாறு கோர்வை செய்வதின்பேரில் அவன் எனக்கு நல்லுதவி அருள்புரிந்தான். பிறகு நான் பாரவான்களான உலமாக்களின் கிதாபுகளைப் பார்வையிட்டேன். அவையாவன: தப்ஸீர் ஜலாலயின், சாவியள் மஆலிமு தன்ஸில் மதாரிக்கு காஸின் ருகுல்பயான் ஷஹீகுல்புகாரி, ஷஹீகுல்முஸ்லிம் கஸசுல் அன்பியா, தஸ்கிறதுல் அவ்லியா, அஹ்வாலே அன்பியா, குலாஸாதவாரிகே அன்பியா, நக்துன்நசர் என்பவைகளாம். இவைகளில் நின்றும் மற்றும் கிதாபுகளில் நின்றும் சுருக்கமாய் எடுத்துக்கோர்வை செய்திருக்கிறேன். இது அல்லாஹு தஆலாவின் புகழினை கோர்வையில்லைப்பத்த அழகான கிரயத்தின் பேரில் வந்தது. இதற்கு

[illegible] கிலுரு அலைஹிஸ்ஸலாம் என்று பேர்வைத் தேன் [illegible], இதில் உதயமாகிப் பார்க்கும்பேர்களில் நின்று ஆத ரவுவைக்கப்பட்டதாகிறது. இதில் ஏதேனும் பிழையிருந்தால் பெரி யோர் சங்கை கொண்டுதிருத்திச் சுத்தப்படுத்திக் கொள்வாராக. பின்னர் நான் அல்லாகுபுகானகுத்தாலாவினிடத்தில் றசூல்மார்களின் கைரான சபியைக்கொண்டு வசிலாதேடினவனாக அதின் பிரயோஜ னத்தை பெரியோர் சிறியோர் அனைவர்களுக்கிடையில் அடைய வளைத்தலாக்குதலையும், இன்னுமிதை அவனுடைய திருமுகத்துக் கே கலப்பறுதலாக்கிவைத்து நயீமென்னும் சுவனலோகத்தைக் கொண்டு ஜயம்பெறுவதற்கு வசிலா வாக்குவதையும் அல்லாகுத ஆலாவிடத்தில் மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன். அவனாகிறவன் கொ டை கொடுப்பவர்களில் மெத்தக் கொடையாளன். கிருபையாளர்க ளில் மெத்தவும் தயாளமானவன். அவன் முகம்மத்சல்லல்லாகு அலை கிவசல்லம் அவர்களின் மீதிலும் அவர்களினமுறையைச் சார்ந்தவர்க ளின் மீதிலும் சலவாத்தும் சலாமும் சொல்வானாகவும்.

1-வது பஸல் (நாயகம் கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வம்மிசப்பதியில் பேசும் பிரிவு.)

நாயகம் கிலுரு அலைகிஸ்ஸலாம் அவர்களின் குன்யத்தென்னும் வைக்கினைப்பேர் அபுல் அப்பாஸ்; பட்டப்பெயர் கிலுரு; அசல் பேர் பல்யா; அவர்கள் நூகு அலைகிஸ்ஸலாம் அவர்களினின்று ஆறுவது தலைமுறையில்வந்த மல்கான்உடைய குமாரர். அவர்கள் காவியுடைய குமாரர். அவர்கள் வாசிக்உடைய குமாரர்; அவர்கள் ஆமிர் உடைய குமாரர்; அவர்கள் அறுபக்ஷத் உடையகுமாரர்; அவர்கள் நூகு அலைகிஸ்ஸலாமுடைய குமாரராயிருக்கும். ரலியல்லாகு அன்கு.

2-வது பஸல் (நாயகம் கிலுரு அலைகிஸ்ஸலாம் அவர்களின் பிறந்தவரலாற்றைப்பற்றிப் பேசும் பிரிவு.)

இஞ்ஜிலாவுல் அக்யாத் என்ற கிதாபில் வருகிறது: அல் தான் சிக்கந்தர் துல்கர்னைன் உடைய தகப்பனார் வான சாஸ்திர மென்னும் நுஜூமுடைய இல்மில் மிக அறிந்தவராயிருந்தனர். அவர் எப்பொழுதும் வானத்தின் நக்ஷத்திரங்களைப் பார்த்துக் கொண்டேயிருப்பார். அப்படியிருக்கையில் ஒருபோது அவர் தம் மனைவிக்குச் சொன்னதாவது: நான் இன்றிரவு ஒரு சாஅத்து நேரத்திற்கு நித்திரை கொள்ளுகிறேன். ஆனதுபற்றி நீவானத் தைப் பார்த்தவளாக இருந்து இப்போது இன்ன நக்ஷத்திரம் இன்ன விடத்தில் உதயமாகக்கண்டால் என்னை எழுப்பிவிடு. அப்

போது நாம் இல்லறமார்க்கத்தில் சந்தோஷ முற்றால் உன்னிடத்தில் கருப்பம் தரித்து ஒரு ஆண்குழந்தை பிறந்து அது கியாமநாள் பரியந்தம் நீண்ட ஹயாத்துடையதாயிருக்குமென்று சொல்லிவிட்டு நித்திரைகொண்டார். அவர்சொல்லிய சமாசாரம்யாவற்றையும் அவர் மனைவியின் தங்கை கேட்டுக்கொண்டு அவள் வானத்தைப் பார்த்தவளாக இருந்து அந்நக்ஷத்திரம் உதயமாகியபோது அவள் தனது புருடரை எழுப்பி சுல்தான் சிக்கந்தர் உடைய தகப்பனார் சொல்லிய செய்திகளை அவருக்குச் சொல்லி அவர்களிருவரும் அவ்வாறே நடந்தார்கள். அதில் கிழுரு அலைகிஸ்ஸலாம் அமல் தரித்தார்கள். அதன் பிறகு சிக்கந்தருடைய தகப்பனார் சிறிது நேரத்திற்கெல்லாம் தூக்கத்தைவிட்டு விழித்துப்பார்க்கையில் அந்நக்ஷத்திரம் உதயமாகி வேறு மண்டலத்தில் போய் அடங்கிவிட்டது. பின்பு அவர் மனம் சஞ்சலமுற்றவராகத் தம் மனைவியின் பேரில் கோபமாய் அவளை நோக்கி, “ஏன் நீ என்னை எழுப்ப வில்லை?” என்று கேட்க, அவள், “எனக்கு வெட்கமாயிருந்தது; ஆனதினால் நான் எழுப்பக் கூடவில்லை” என்று சொல்லியபோது, அவர், “நான் இந்நக்ஷத்திரத்தைத் தான் நாற்பது வருடகாலமாக வழிபார்த்திருந்தேன்; அல்லாது தஆலாவின்பேரில் சத்தியமாக நீ என்னுடைய வாழ்நாளை அவமாக்கிவிட்டாய்” என்று சொல்லி விட்டு மறுபடியும் அவர், “இப்பொழுது வேறொரு நக்ஷத்திரம் உதயமாகின்றது; அதிலாவது நாம் முன்சொன்னபடி செய்யவேண்டும்; அதனால் ஆண்குழந்தை ஹமல்தரிக்கும். அதன் அதிகாரம் எழுவானந்தொடுத்து படுவானம்வரையில் செல்லு”மென்று சொன்னவராய் அந்நக்ஷத்திரம் உதயமாகியபோது அவ்வாறே செய்தார். அதில் சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைன் ஹமல்தரித்தனர். அதேயிரவில் தான் கிழுரு அலைகிஸ்ஸலாமும் கருப்பத்தில் தரித்தார்கள். மேற்படி சிக்கந்தர் துல்கர்னைன் மஷ்ரிக்குக்கும் மகரிபுக்கும் ராஜாவாகி விடவும், கிழுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் அவருக்கு மந்திரியாக விருந்து மாவுல்ஹயாத்தென்னும் என்றென்றும் ஜீவித்திருக்கிற சிறப்புற்ற தண்ணீரைக்குடித்து சதாகாலமும் ஹயாத்தாகவேயிருந்து வருகிறார்கள். அவ்விருவர்களின் தாயாரும் ஒன்றித்த சகோதரிகளேயாவர். ரலியல்லாகு அன்கும்.

3-வது பஸல் (நாயகம் கிழுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் தற்புத்தியானதில் பேசும் பிரிவு.)

இமாம் சஃலபி ரஹுமதுல்லா உடைய கிதாபில்வருகிறது: அதென்னவெனில்; கிழுரு அலைகிஸ்ஸலாமுடைய தகப்பனார் அர்

அரசராயிருந்தார். அவர்களின் தாயாரின் பேர் அல்ஹா. அவர்கள் கிலுரு அலைஹிஸ்ஸலாமைப்பெற்று ஒரு மலைப்பொதும்பில் விட்டு விட்டுப்போய் விட்டார்கள். அப்படியிருக்கையில் ஏதோ ஒரு சிறிய நாட்டிலுள்ள ஒரு மனிதனுடைய ஆடானது பிரதிதினமும் அம் மலையின் பொதும்பில்வந்து அவர்களுக்குப் பால் ஊட்டிவிட்டுப் போகிறதாயிருந்தது. இது செய்தி அந்த ஆட்டுக்காரனுக்குத் தெரியவரவும் அவன் கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தன்னுடைய வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் வாலிபப்பிராயத்தை எய்தியபோது தங்கள் தகப்பனாராகிய அரசருக்கு இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் சீது அலைஹிஸ்ஸலாம் இருவர்களின் வேதங்களை எழுதுவதற்காகவேண்டி எழுதுகிறவர் தேவையாயிருந்தது. அதினால் அவருடைய சபைக்கு பாரவான்களான உலமாக்களெல்லாம் அங்குவந்து கூடி ஒவ்வொருவரும் எழுதிக்காட்டவும் அவர்கள் அனைவர்களுடைய எழுத்தைவிட கிலுரு அலைஹிஸ்ஸலாமுடைய எழுத்து மிகவும் அழகாகத்தெரியவும் அரசன் கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்களை முன்னிலையாக ஏற்படுத்திவிட்டு நாயகம் அவர்களின் வம்மிசத்தைக் குறித்துக்கேட்டுவிட்டு கிலுரு அலைஹிஸ்ஸலாமைத் தன்னுடைய மகனென்று அறிந்தார். பிறகு அரசர் நாயகம் அவர்களைத் தமது ராஜாங்கத்திற்கு காரியகர்த்தராக ஏற்படுத்த நாடியபோது அவர்கள் அதனை கபூல்செய்யாமல் அவரைவிட்டு ஒளித்தோடினவராக சமுத்திரத்திலுள்ள தீவுக்கு யாத்திரை போய்விட்டார்கள். ரலியல்லாகு அன்கு.

4-வது பசல் (கிலுருவென்று பேர்கிடைத்த காரணத்தில் பேசும் பிரிவு.)

சஹீபுகாரி, சஹீஹு முஸ்லிம், திருமதி, முஸ்னத் இமாம் அஹ்மத் இந்த கிதாபுகளில் அபூஹுறைரா ரலியல்லாகு அன்குவைத் தொட்டும் முஃஜிமே தபுறானியில் இபுனு அப்பாஸ் ரலியல்லாகு அன்குவைத் தொட்டும் ரிவாயத்து வந்திருக்கிறது. நாயகம் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புற்பூண்டு முதலியவைகள் முளைக்காத அல்லது பட்டுப்போன புற்களில் உட்கார்ந்தால் அதுசமயமே அந்த பூமியும் புற்களும் பச்சையைக்கொண்டு பசுமையாகி விடுகின்றவைகளாயிருந்தன. இதற்காகத்தான் அவர்களுக்கு கிலுரு என்றுபேர் கொடுக்கப்பட்டதென்று சொன்னார்கள். இன்னும் காலின் மஆலிமே தன்ஸில் முதலிய தபிசீருகளில் வருகிறது. கிலுரு அலைஹிஸ்ஸலாம்

அவர்கள் எந்த இடத்தில் தொழுதாலும் அவ்விடத்தில் அவர்களைச் சுற்றி புல்பூண்டுகள் பசுமையாகிவிடுகிறவைகளாயிருந்தன. இதற்காகத்தான் அவர்களுக்கு கிளுரு என்று பெயர் வைக்கப்பட்டதென்று. இன்னும் இமாம்பக்ருத்தின் ராஸி தங்கள் தப்ஸீரில் எழுதியிருக்கிறார்கள்: கிளுரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரிடத்தில் நிற்கிறதில்லை, அவ்விடம் பச்சையைக் கொண்டு செழுமையானதேயொழிய என்று. இன்னும் சில கிதாபுகளில் இதைப்போல் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது: ஒருபோது கிளுரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புற்பூண்டு இல்லாதகாட்டு வனாந்தரத்தில் போகிறபோது அவர்களின் புறம்பாகவே புற்பூண்டு தளிர்த்துக்கொண்டே போயின; அதனால் அவர்களுக்கு கிளுரு என்று பெயர் சொல்லப்படுகிறது என்று. ரலியல்லாகு அன்கு.

5-வதுபஸல் (கிலுரு அலைகிஸ்ஸலாமுடைய நபிபட்டத்தில் பேசும் பிரிவு.)

இமாம் முல்லாஸ அத்திஹலபி என்கிறவர்கள் எழுதியிருக்கிறார்கள்: கிளுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் நபியாயிருக்குமென்றவிஷயத்தில் ஜம்ஹூரான உலமாக்கள் ஒற்றுமையாகியிருப்பதை நவவிரகுமகுல்லாவும் மூர்க்கமாக்கி வைத்தார்கள். இதற்கு ஆதாரமாக அப்துபுனு அமீது என்பவர்கள் ஸபீவுபுனி அனஸ் ரலியல்லாகு அன்குவைத்தொட்டும் ரிவாயத்து செய்து சொல்கிற தென்னவெனில்: மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்கள் கிளுரு அலைகிஸ்ஸலாமை சந்திக்கப் போனபோது அவர்கள் கிளுரு அலைகிஸ்ஸலாமை நோக்கி "அஸ்ஸலாமு அலைக்கயாகிலுரு" என்றுசலாம் சொல்லவும் அதற்குமறுமொழி கிளுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் "வஅலைக்கஸ்ஸலாம்யா மூஸா" வென்றுபதில் அளிக்கவும் மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்கள் "ஆய்கிலுரே! நீர் எனதின்பேரை எவ்வாறு அறிந்தீர்"? என்றுகேட்க அதற்கு அவர்கள் "ஆய்மூஸாவே! யார் என்னை உமக்கு கிளுரு என்று அறிவித்துக்கொடுத்தானோ அந்த நாயன்தான் எனக்கும் உம்மை மூஸா வென்று அறிவித்துத் தந்தான்" என்று சொன்னார்கள் என்று. இந்த ரிவாயத்தும் கிளுரு அலைகிஸ்ஸலாம் நபி என்பதின்பேரில் துலாம்பரமாக அறிவிக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் சிலர் அவர்கள் வொலியாயிருக்குமென்று சொன்னதை உலமாக்கள் ரத்துசெய்துவிட்டார்கள். இன்னும் ஷைக் அப்துல்ஹக் திஹ்லவி ரகுமகுல்லா அவர்கள் மிஷ்காத்துல் மசாபீஹ் என்ற கிதாபின் ஷறாஹாகிய அஷிஅத்துல்லமஆதில் கிளுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் நபி என்பது

தான் சஹீஹான சொல்லாயிருக்குமென்று தீர்மானித்து இருக்கிறார்கள். இன்னும் மிகுந்த உலமாக்கள் அவர்கள் நபி என்பதற்கு ஆதாரமாக இந்த ஆயத்தை தலீலாக எடுத்துக்காட்டுகிறார்கள். அவையாவன: "வமாப அல்துகு அன் அம்ரி" யஅனீ கிலுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் மூசா அலைகிஸ்சலாமை நோக்கி "ஆய் மூசாவே! நான் கப்பலை ஓட்டை ஆக்கினதும் பையனைக் கொன்றதும் விழுந்து போகிறசுவரை நேராய் நிமிர்த்தியதும் ஆகிய இவை மூன்று காரியத்தையும் எனது யோசனையாய் நான் செய்துமுடிக்கவில்லை என்று சொன்னார்கள். இதன் விரிவு விவரங்கள் இன்ஷா அல்லாகுதஆலா பின்னால் எழுதிக்காட்டப்படும். ஆனதால் இந்த ஆயத்தின் மூலமாய் அவர்களுக்கு அல்லாகு தஆலாவுடைய உத்திரவு உண்டாகும் அல்லது மலக்கு மூலமாக வஹியுவருமென்று மேற்படி ஆயத்து மூலமாக அறியப்படுகிறது என்று. இன்னும் இஸ்மாயில் இபுனு அபீலியாத் என்பவரும் முகம்மதுபுனி இஸ்காகும் இன்னும் சில கிதாபு உடையவர்களும் சொல்லுகிறார்கள்: கிலுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் முருசலான நபியாயிருக்கும் அவர்களை வேறு கௌமுகள் பேரில் அனுப்பிவைக்கப்பட்டது. அந்த கௌமுகள் அவர்களுக்கு வழிபட்டு நடந்தார்கள் என்று சொன்னசொல்லை அபுல்ஹசன் கிருகானி இமாம் இபுனுஜௌஸி ரகிமகுல்லா இருவர்களும் பல வந்தப்படுத்தி யிருக்கிறார்கள்.

6-வது பஸல். (நாயகம் கிலுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் மாவுல் ஹயாத் தண்ணீரைப் பெற்றுக் கொண்டதில் பேசும் பிரிவு)

ரிவாயத்இபுனு அஸாகிர் என்பவர்கள் அபூஜ அபர்றஸியல்லாகு அன்குவைத்தொட்டும் ரிவாயத்து செய்திருக்கிறார்கள்: என்னவெனில், சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைன் அவர்கள் அல்லாகு தஆலாவுடையசாலிஹான அடியாராகியிருந்தனர். அவர்கள் அதிகாரமோ ஏழுவானம் தொடுத்து படிவானம்வரையில் நடைபெற்று வந்ததும் தவிர அவர்களுக்கு ஒரு மலக்கு அதிக மஹப்பத்தாயிருந்தார். அவருக்கு ரப்ராயில் என்றுபெயர் சொல்லப்படும். அவர் எப்பொழுதும் சிக்கந்தர் துல்கர்னைன் இடம் வந்துபோய்க்கொண்டே யிருப்பார். ஒருதினம் இருவரும் பேசிக்கொண்டிருக்கிறபோது சிக்கந்தர் துல்கர்னைன் அவர்கள் அம்மலக்கிடத்தில், "நீங்கள் வானத்தில் எவ்வாறு அல்லாகு தஆலாவை இபாதத்து செய்துவருகிறீர்கள்." என்று கேட்க, அவர் சிக்கந்தரை நோக்கிச் சொன்னதாவது: "நீங்கள் செய்யும் இபாதத்தானது எங்களுடைய இபாதத்துகளில் சேர்த்துப்பார்த்

தால் மிகவும் கொஞ்சமேயாகும்; ஏனெனில் வானலோகத்தின் மலக்
குகளில் சிலர் கியாம் என்னும் நிலையிலேயே நிற்கிறார்கள்; ஒருபோ
தும் அவர்கள் அதைவிட்டுத் தலையைக்கவிழ்த்துகிறார்களில்லை; இன்
னும் சிலர் சஜதாவிலேயே தரித்திருக்கிறார்கள்; அவர்கள் அதைவிட்
டுத் தலையை உயர்த்துகிறார்களில்லை; இன்னும் சிலர்ருகூவிலேயே
நிற்கிறார்கள்; அதைவிட்டு நிலைக்குவருகிறார்களில்லை; இன்னும் அவர்
கள் அனைவரும் சொல்லுகிறதாவது: (ரப்பிமா அபத்னாக ஹக்கஇபா
ததிக்) 'ஆய்எங்கள் நாயனே! நாங்கள் உன்னைவணக்கத்தின் ஹக்
குபிரகாரம் வணங்கவில்லை' என்று சொல்லுகிறார்கள்" என்று அம்ம
லக்கு சொன்னபோது சிக்கந்தர் துல்கர்னைன் அழுதவராய்ச் சொன்
னார்: "ஆய்ரபுராயீ லென்னும் மலக்கே! எனது வாழ்நாள் நீளமாயி
ருக்கும்பக்ஷத்தில் அல்லாகுதஆலாவை எப்படிவணங்கவேண்டுமோ
அப்படி வணங்குவேன்" என்றுசொல்லவும் அம்மலக்கு சொன்னார்:
"அல்லாகுதஆலா பூமியில் மாவுல்ஹயாத்தென்னும் ஓர் சு்னையை
சிருஷ்டித்திருக்கிறான்; அதில் நின்றும் எவனொருவன் ஒரு
மிடறுதண்ணீர்குடிக்கிறானோ அவனுக்கு மௌத்து கிடையாது; மே
லும் அவனுக்கு அல்லாகுதஆலாவின் புறத்தில் நின்றுதான் மௌ
த்துவரவேண்டும்" என்று சொல்லவும் துல்கர்னைன் அவர்கள், அந்த
மலக்கைநோக்கி, "அந்தச்சுனை இருக்குமிடம் உமக்குத்தெரியுமா"?
வெனக்கேட்க அவர், "அவ்விடம் எனக்குத் தெரியாது; ஆயினும்
வானத்திலுள்ளவர்களாகிய மலக்குகள் பேசிக்கொள்ளுகிறதாவது:
அல்லாகு தஆலா பூமியில் அதிக இருளான ஓர் இடத்தைப்படைத்
திருக்கிறான்; அங்கு மனுக்களாலும் ஜின்களாலும் போகமுடியாது.
ஆதலின், அந்தச்சுனை அவ்விடத்தில் தான் இருக்கிறதென்று நாங்
கள் அபிப்பிராயப்படுகிறோம்" என்று அவர்சொல்லிமுடித்தார்
பிறகு துல்கர்னைன் அவர்கள் அக்காலத்தில் இருக்கப்பட்ட எல்லா
உலமாக்களையும் தம்முடைய ராஜசபையில் வரவழைத்து "நீங்
கள் மாவுல் ஹயாத்தென்னும் சுனை இருக்குமிடத்தை அறி
வீர்களா?" வெனக்கேட்டபோது அவர்களனைவரும், "அப்படிப்
பட்ட ஒரு சுனையை நாங்கள் அறிந்ததில்லை" என்று பதில் அளித்து
விட்டார்கள். மறுபடியும் துல்கர்னைன் அவர்கள் அவர்களிடம் "உங்
கள்புத்தியில் அதிகவோர் இருளான இடம் தோன்றுகிறதா?" என்
றுகேட்டபோது அவர்களில் ஓர் ஆலிம்மாத்திரம் (அவருக்கு ஹக்
மாதுல் ஹக்கிமே என்று பெயர்சொல்லப்படுகிறது) சொன்னார்: "நான்
ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய வசியத்நாமாவில் அந்த இருள் இருக்
குமிடத்தை ஓதியிருக்கிறேன்; அது பொழுது அடையுமிடத்தில்

இருக்கிறதாய் அதிற்சொல்லப்படுகிற" தென்று சொன்னார். பிறகு துல்கர்னைன் அவர்கள் அந்த இருள் இருக்கிறஇடத்தைக்கண்டுபிடிக்கிறதற்காகவேண்டிப் பெரும்படையுடன் பிரயாணப்பட்டு சஞ்சாரம் செய்தவர்களாய்ப் பனிரண்டு வருடம் யாத்திரைசெய்ததின் பிறகு அந்த இருள் இருக்குமிடத்தின் ஓரமாய் வந்துசேர்ந்தார்கள். அந்த இருளைக் கண்ணுற்றுப் பார்க்கையில் அது இரவின் இருளைப்போலல்ல; அது பார்க்கக்கூடாத அடர்த்தியாகிய ஏகாந்தப் புகைச்சலாயிருக்கிறது; துல்கர்னைன் அவர்கள், அவர்களுடைய சேனைகளையொன்றுகத்திரட்டி தாங்கள் அந்த இருளுக்குள் போகவேண்டுமென்ற நாட்டத்தை வெளிப்படுத்தவும், அவர்களனைவர்களும் அதற்குள் போகக்கூடாதென்று தடுத்தார்கள். அப்போது துல்கர்னைன் அவர்கள் தம்முடன் வந்திருக்கிற உலமாக்கள் ஹக்மாக்கள் இடம் யோசனைகேட்டுக்கொண்டு தாங்கள் அதற்குள் போகிறதற்காக வேண்டி ஆறாயிரம் ஜனங்களைத் தெரிந்தெடுத்தார்கள். அவர்களோ வாலிபப் பிராயமுடையவர்கள். அவர்களுக்கு எதிர்ப்போக குட்டி போடாத பெண் குதிரைகளையுங் கொடுத்து கிலுறு அலைகிஸ்ஸலாமை இரண்டாயிரம் சேனைகளுக்குத் தலைவராக நேமித்து முன்னால் போகும்படி கட்டளையிட்டார். இது நிற்க துல்கர்னைன் அவர்கள் தாங்கள் நாடியிருக்கிற நாட்டத்தை, மறைத்த வண்ணமாகவே வைத்துக்கொண்டிருந்தார்கள். எனினும் கிலுறு அலைகிஸ்ஸலாமுக்கு அல்லாகுதஆலாவின் ஹிதாயத்தினால் அறிவிக்கப்படவும் அந்தமாவுல் ஹயாத்தென்னும் சுனை அந்த இருளினுள் தான் இருக்கக்கூடுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். அந்த இருளில் நடக்கிறபோது அதில் மைதானமொன்று அவர்களின் பார்வைக்குத் தெரியவரவும் அவர்கள் தங்கள் சேனைகளை மைதானத்தின் சமீபமாக நிற்பாட்டி விட்டு அச்சுனையிருக்கும் ஓரமாய்வந்துபார்க்க அவ்விடத்தில் ஓர் சுனையிருந்தது. அதின் ஜலம் பாலைவிட அதிகவெண்மை; தேனைவிடமெத்தருசியாயிருந்தது. பிறகு அவர்கள் அதில் குளித்துவொளுவுஞ்செய்து சுக்குருக்காக இரண்டு ரகாஅத்தும் தொழுதுவிட்டு அதில் னின்றும் ஒரு மிடறு தண்ணீரும் குடித்துவிட்டுத் திரும்பிவந்து விட்டார்கள். ஆயினும் துல்கர்னைன் அவர்கள் அந்த இருளில்வழிதப்பிப்போய்த் தண்ணீரையும் பெற்றுக்கொள்ளவில்லை என்று. இன்னும் தப்சீர்றிப்யானில் வருகிறது சிக்கந்தர் துல்கர்னைன் அவர்கள் இருள் பூமிக்குள் புகுந்து நடக்கத் தயாரானபோது அவர் தமது ஜனங்களை நோக்கிவாசனைகளில் எதற்குவெகுபார்வை தோற்றுமெனக்கேட்க

குதிரைக்கு என்று சொல்லப்பட்டது. பிறகு அவர்கள் குதிரைகளில்
எதற்கு வெகுபார்வைதோன்று மென்று கேட்க,'பெண்குதிரைக்கு'
என்று சொல்லப்பட்டது. பெண் குதிரைகளில் எதற்கு அதிகப்பார்
வைதோன்றுமென்றுகேட்க, 'குட்டிபோடாத பெண்குதிரையாயிரு
க்கு'மென்று சொல்லப்பட்டது. பிறகு துல்கர்னைன் அவர்கள் தங்கள்
குதிரைப்படைகளில் நின்றும் ஆறாயிரம் குட்டிபோடாத பெண்கு
திரைகளைத்தெரிந்தெடுத்து அவற்றில் ஆறாயிரம் சேனைகளையேற்றி
க்கொண்டு மற்றவர்களைப்பின்னால் நிறுத்திவிட்டு அந்த இருளில்
ஓர் இரவும்பகலும் நடந்தார்கள். ஆனால், அப்படைகளுக் கெல்லாம்
கிலுறு அலைகிஸ்ஸலாமே தலைவராயிருந்தனர். அவர்கள் போனவழி
யில் மாவுல்ஹயாத்தென்னும் சுனைதென்படவும் அவர்கள் அதனிட
மாய்ச்சென்று அதில் குளித்துத்தண்ணீரும்குடித்தார்கள். இதுநிற்க
சிக்கந்தர் துல்கர்னைனும் மற்றவர்களும் வழிதப்பி ஓர் கல்மேட்டில்
நடக்கிறபோது சேனைகள் துல்கர்னைன் இடம் இதென்ன கற்களா
யிருக்கின்றனவென்று கேட்க அவர்கள் அவர்களுக்குச் சொன்னதா
வது: "நீங்கள் அவைகளை எடுத்துக்கட்டிக்கொள்ளுங்கள்; ஏனெ
னில் இதில் நின்று கொஞ்சமெடுத்தவர்களும், அதிகம் எடுத்தவர்க
ளும் கைசேதப்படுவார்கள்" என்றுசொல்ல அவர்கள் அனைவர்களும்
தங்களால் இயன்ற மட்டிலும் அக்கற்களைஎடுத்துத் தங்கள் தங்கள்
வாகனங்களில் நிரப்பிக்கொண்டு அப்பால் அவர்கள் அந்த இருளைவி
ட்டு வெளிதனில் வந்து பார்க்கையில் அவைகளெல்லாம் பச்சை மா
கதங்களாயிருந்தன. அப்போது அவர்கள் "அதிகமாக எடுத்தோமி
ல்லையே" என்று கைசேதப்பட்டார்கள். இந்தச்செய்தி தப்சீர் ரூகுல்
பயானில்வருகிறது. இன்னும் தவாரிகெஅன்பியாவில்வருகிறதாவது
கிலுறுஅலைகிஸ்ஸலாம் அவர்களை சிக்கந்தர் துல்கர்னைன் பட்டாளத்தி
ற்குத் தலைமையாக நேமித்துவிட்டுச் சொன்னதென்னவெனில்,
அந்த இருளில் ஒருவர் மற்றொருவரைப்பார்க்க முடியாதென்பது
நிச்சயமே. அவ்வாறு இருக்க அப்போது என்னசெய்கிறதென்று
ஹுகமாக்களிடம் கேட்க அவர்கள் சொன்னார்கள்: அப்படி நேரிட்
டால் நம்முடைய ராஜ தர்பாரில் இருக்கிற இரத்தினக் கற்கள்
இரவில் விளக்கைப்போல் பிரகாசிக்கத் தக்கவைகள். அவைகளை
நம்முடன் எடுத்துக்கொண்டு போகவேண்டியது. சமயம் நேரி
டும்போது அதன் பிரகாசத்தைக் கொண்டு இருளில் வழி நடந்
துபோகலாமென்று சொன்னபோது துல்கர்னைன் அவர்கள் சொல்
லியபடி இரத்தினக் கல்லொன்றை எடுத்து கிலுறு அலைகிஸ்ஸ

லாம் இடத்தில் ஒப்பித்துவிட்டு சிம்மாசனத்தையும் இராஜக்கிரீடத்தையும் வேலைக்காரர்களில் நின்று ஒரு புத்திமான் வசம்கொடுத்துவிட்டு பனிரண்டு வருடம் யாத்திரைசெய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு அப்பால் நீன் முதலிய சாமான்கள் தயார்செய்தவர்களாக இருள்பூமிக்கு அப்புறம் இருக்கிற மாவுல்ஹயாத்தென்னும் சுனையைத் தேடிப் பிரயாணப்பட்டார்கள். அவ்வாறு பிரயாணப்பட்டு யாத்திரை செய்தவர்களாக பனிரண்டுவருடம் சென்றதின் பின் காபுமலைக்கிட்டவரவும் அங்குப் பாதைத்தவறி ஒரு வருடம்வரையில் சுற்றித்திரிந்தார்கள். கிலுறு அலைகிஸ்ஸலாம் அவர்களும் பட்டாளத்தைவிட்டுத் தனித்தவர் இருள்பாகத்தில்போய் அகப்பட்டுக்கொண்டார்கள். அப்போது அவர்கள் தங்கள் கைவசம் வைத்திருந்த லஅல் என்னும் இரத்தினக்கல்லை ஜேபிலிருந்து வெளியில் எடுத்து வைத்தபோது அதன் பிரகாசத்தினால் அந்த இருள்நீங்கி அல்லாகுதஆலாவுடைய கிருபை கடாக்ஷத்தைக்கொண்டு அவர்களுக்கு மாவுல் ஹயாத்தென்னும் சுனை தென்பட்டு அவர்கள் அதில் நின்றும் முகம் கைகால் கழுவிக்கொண்டு அதன் தண்ணீரையும் குடித்துவிட்டு அது கிடைத்ததின்பேரில் அல்லாகுதஆலாவை சுகுர் செய்தார்கள். அவன் அவர்களின் வாழ்நாளை நீளமாக்கி வைத்தான். பிறகு அவர்கள் அந்த இருளைவிட்டுத் திரும்பி வரும்போது மற்றொரு இருள்பாகமாகவந்து அகப்படவும் அந்த இரத்தினக்கல்லை பூமியில் எடுத்து வைத்தபோது ஏகாந்த வெளிச்சமுண்டாயிற்று. அப்போது அநேகபட்டாளங்களும், அந்த இருளில் வழிதப்பிக் கிடந்தவர்களனைவரும் அதன் வெளிச்சத்தினால் கிலுறு அலைஹிஸ்ஸலாம் இருக்குமிடம்வந்து சேர்ந்தார்கள் என்று. இவ்விடத்தில் சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைனுடைய கதைபாகத்தை எழுத இடமாயிருப்பதால் சிலவற்றை எழுதி முடிப்பாம்.

7-வது பாஸல் (சுல்தான் சிக்கந்தர் துல்கர்னைனுடைய கீர்த்தனை பிரபந்தத்தில் பேசும் பிரிவு.)

சிக்கந்தர் துல்கர்னைன் அவர்கள் பைலகூஸ் ரூமி உடைய குமாரர். அவர் இஸ்கந்திரியாவென்னும் ஊரில்பிறந்தார். இதின் காரணத்தினாலேயே அவருக்கு சிக்கந்தர் என்னும் பேர் சொல்லப்படுகிறது. இன்னும் மகுதிகொளில் வருகிறது: அவர் பிறந்தது ரூம் பட்டணத்திலாயிருக்குமென்று வருகிறது. தவிர அவர் ஆயிரத்தி ஐநூறு வருடம் உலகத்தில் ஜீவித்திருந்து அடங்கலையும் கட்டி அரசாண்டு

உலகத்தைச் சுற்றிப்பார்த்தார். அவர்கள் நபி என்பதில் கிலாபு வந்திருக்கிறது. அவர்களின் பட்டப்பெயர் துல்கர்னைன். அதற்குப் பொருளாவது இரண்டு கொம்புடையவர் என்பதேயாம். அவ்வாறு அப்பேர்கிடைத்தகாரணமாவது அவர்கள் சூரியனின் இரண்டு கொம்புகளென்னும் எழுவாயுக்கும் படுவாயுக்கும் போயிருக்கிறபடியால் அப்பேர்கொடுக்கப்பட்டதென்றும், இன்னுமொரு ரிவாயத்தில் வருகிறதாவது: அவர்களின் தலையில் சிறிய இரண்டு கொம்புகள் முளைத்திருந்தனவென்றும் அவற்றை மறைத்துத் தலைப்பாகைகட்டினார்களென்றும் அவர்களில் நின்றுதான் முன் தலைப்பாகையுடைய அசல் உண்டானதென்றும் மஆலிமே தன்ஸீல், மதாரிக் காஸின், கமாலைன் முதலிய தப்ஸீர்களில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் ரிவாயத்து வருகிறது: துல்கர்னைனுடைய தகப்பனார் ஸப்பனாகிய ராஜனாயிருந்தார்.

அவர்மௌத்தாகிவிட்டபோது துல்கர்னைன் தனது தகப்பனுக்குப் பகரமாய் ராஜ அதிகாரத்தில் வரவும் பெருமையும் வம்புத்தனமும் அவருக்கு அதிகமாகிவிட்டன. பிறகு அல்லாகுதஆலா ஒரு சாலிஹான தோழரை அவரிடம் போகும்படி அனுப்பினான். அவர் துல்கர்னைனிடம் வந்து சொன்னார்: "ஆய் மனிதனே! நீர்மௌத்தாவதற்கு முன்பாகவே வம்புத்தனத்தைவிட்டு மீண்டு அல்லாகுதஆலா அளவில் தவ்பாச்செய்யும்" என்றுசொல்லவும் அவர்பேரில் துல்கர்னைன் மெத்தவும்கோபமாகி அவரைச்சிறைச்சாலையில் கொண்டுபோய் அடைத்துவிடும்படி கட்டளைசெய்தார். அவ்வாறேசெய்யப்பட்டது. அப்பால் அவர்மூன்று நாள்வரையில் கைதியாயிருந்து வருகையில் அல்லாகுதஆலா அவர்களளவில் ஒருமலக்கை அனுப்பினான். அவர் சிறைச்சாலையின் முகட்டையுடைத்து அம்மனிதரை அதன்வழி விட்டு வெளிப்படுத்திவிட்டார். மறுநாள் சுபுகு ஆகியபோது துல்கர்னைனுக்கு இச்சமாசாரம் எட்டவும் அவர் சிறைச்சாலையில்வந்து பார்க்க, அதன் முகடு திறக்கப்பட்டிருப்பதைக்கண்டவுடன் அவரின் சரீரம் பயத்தால் நடுக்கம் கொண்டது. பிறகு அவர் தன்மனதில்எண்ணினதாவது: நமது வல்லமை அல்லாகுதஆலாவுக்கு முன்பில் படு ஹீனமானதாயிருக்கும் என்று சொல்லிக்கொண்டு ஆச்சரியமுற்றவராய்ச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த மனிதனைத்தேடிப் பார்க்கையில் அவர் உயர்ந்த மலையொன்றின்மேல் தொழுதுகொண்டிருக்கிறார். அவர் துல்கர்னைனைப் பார்த்தபோது அவரைநோக்கிச்

சொன்னதாவது: நீர் இப்போது வம்புத்தனத்தை விட்டுமீண்டு அல்லர் அளவில் தவ்பாசெய்து மீளுமென்று சொன்னார்.

இதை துல்கர்னைன் கேட்டபோது அவர் தம்முடைய பட்டாளத்தை நோக்கி அம்மனிதரைப் பிடிக்கும்படிக்குக்கட்டளையிடவும் அவர்கள் அவரைப் பிடிக்கப்போகையில் அல்லாகு தஆலா அவர்களின்பேரில் நெருப்பையிறக்கிஅவர்களை எரித்துவிட்டான் இதை துல்கர்னைன் கண்ணுற்றுப் பார்த்தவராகக் கீழேவிழுந்தார். தெளிவடைந்த பிறகு அவர் அல்லாகுதஆலா இடத்தில் தவ்பாசெய்து மீண்டு அந்த சாலிஹான மனிதருக்கு அடிபணிந்துவிட்டார். பின்பு துல்கர்னைன் அவர்கள் வம்பர்களாகிய ராஜாக்களையெல்லாம் அடக்கி அரசாண்டு மற்றஜனங்களையும் அல்லாகு தஆலாவின் மார்க்கத்தில் அழைத்து தொழுகிறதற்காகவேண்டி பிரமாண்டமான மஸ்ஜிது ஒன்று கட்டி முடித்தார். அதோ உயரத்தில் நூறுமுழம் நெடுகத்தில் நானூறுமுழம் உள்ளதாகக் கட்டிவைத்தார். என்றும் இவர்தான் மஸ்ஜிது கட்டிவைத்தவர்களில் முந்தினவர்என்றும் சொல்லப்படுகிறது. இன்னும் ரிவாயத்துவருகிறது: அல்லாகு தஆலா துல்கர்னைன் அவர்களுக்கு வல்லமையும் புத்தியும் சகலவஸ்துகளையும் கொடுத்து இருளையும் ஒளியையும் மேகத்தையும் வசமாக்கிக் கொடுத்திருந்தான்: ரிவாயத்து, இபுனு-அப்பாஸ் ரலியல்லாகு அன்கு சொன்னார்கள்: துல்கர்னைன் அவர்கள் படைகளுடன்போகையில் மக்காவுக்கு நேராகவரவும் அப்போது மக்காவில் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் இருந்தார்கள். அவர்கள் அங்கிருப்பதைக் கேள்விப்பட்டு உடனே வாகனத்தை விட்டுக் கீழிறங்கி துல்கர்னைன் சொன்னதாவது: அல்லாகுதஆலாவின் தோழர் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமிருக்கிறவூரில் நாம்வாகனத்தின்பேரில் ஏறிக்கொண்டுபோவது தகாதென்று சொல்லிவிட்டு வெறுங்காலால் நடந்தவர்களாய் இபுறாஹீம் நபி சமீபத்தில்வரவும் அவர்கள் இவர்களுக்கு ஸலாம்சொல்லி கட்டி அணைத்தார்கள்.

இவர்கள் ஸலாம்சொல்லுமிடத்தில் கழுத்தைக்கட்டி அணைத்தவர்களில் முந்தினவர்களென்று சொல்லப்படுகிறது. அப்போதுதான் துல்கர்னைனுக்கு மேகத்தை வசமாக்கிக்கொடுக்கப்பட்டது. ஆதலின் பொருட்டு அவர்கள் யாத்திரை போக நாடினால் அவர்களையும் அவர்களின் படைகளையும் ஆயுதம் முதலிய சாமான்களையும் மேகம் சுமந்துகொண்டுபோகும். மேலும் அவர்களுக்கு ஒளியையும் இருளையும் வசமாக்கிக்கொடுக்கப்பட்டிருந்தன. அவர்கள் நடந்தால் ஒளிவு முன்னும் இருள் பின்னாலும் அவர்களைப் பொதிந்துகொண்டே போ

கும். ரிவாயத்து துல்கர்னைன் அவர்கள் மக்ரிபு புறம் போகும்போது
எந்த கவுமுகளைக் கண்டார்களோ அவர்களையெல்லாம் ஈமானில்
அழைத்து அவர்களுக்கு வழிப்பட்டவர்களை ஒப்புக்கொண்டார்கள்;
வழிப்படாதவர்களை இருள்போய்ப் பொதிந்து அவர்களின் பட்ட
ணங்களும் கோட்டை கொத்தளம் வீடு வாசல் கண் மூக்கு வாய்
செவி வயிறு முதலானவைகளில் நிரம்பி வருத்தப்படுத்தும். அப்
பால் அவர்கள் ஈமான் கொள்வார்கள். இப்படியே கைநாகப்போய்
ஜனங்களை இஸ்லாமாக்கிக் கொண்டே அல்லாகு தஆலா சொல்லிய
கவுமுகளையும் கண்டு அவர்களையும் மற்றவர்களைச் செய்தது
போல் செய்து அவ்விடமிருந்து எட்டு இரவும் பகலும் இருளில்
நடந்து பூமியைச்சூழ்ந்துகொண்டு இருக்குமென்னத்தக்கதானமலை
யை கண்டார். அதில் ஒரு மலக்கு தஸ்பீகைக்கொண்டு சத்தத்தை
உயர்த்தியவராய் அம்மலையை பிடித்துக்கொண்டு (சுபுஹானரப்பி
மினல்அஸலி இலாமுன்தஹத் தஹ்ரி, ஒசுபுஹான ரப்பீமில் அவ்வ
ரித்துன்யா இலா ஆகிரிஹா, ஒசுபுஹான ரப்பீமின் மவுலஈசுப்பீ இ
லாஅர்ஷி ரப்பீ ஒசுபுஹான ரப்பீமின் முன்தஹல்ஹுல் மதி இலன்
நாரி) என்று சத்தமிட்டவராக நின்றார். அவரை துல்கர்னைன் அவர்
கள் பார்க்கவே அல்லாகு தஆலாவுக்கு ஸுஜூது செய்தவர்களாக
மோதிக்கீழேவிழுந்துமிரண்டு தலையைக்கிளப்பவே அம்மலக்கானவர்
இவர்களைப்பார்த்து ஆதமுடைய மக்களில் நின்றும் ஒருவரும் இந்த
லத்தை எத்திக்கொள்ளவில்லை. அப்படியிருக்க எப்படி நீர் எத்திக்
கொண்டீர் என்று கேட்கவும் அப்போது அவர்கள் சொன்னார்கள்:
அல்லாகுதஆலா இதனை இயன்றதாக்கித்தந்தான். ஆனால் நீர் இதனை
ப்பிடித்திருக்கும் காரணமென்னவென்று கேட்டபோதுசொன்னார்.
இதுதான் பூமியைச்சூழ்ந்திருக்கின்ற காபுமலை; இதைவிட பிரமாண்
டமானமலை உலகத்தில்கிடையாது. நானோ இதைக்கொண்டு சாட்ட
ப்பட்ட மலக்கு. இம்மலை பூமியில் இல்லாதிருக்கில் பூமியிலிருப்ப
வர்களோடு பூமி கவிழ்ந்துவிடும் என்றார். அப்பால் துல்கர்னைன் அவ
ர்கள் திரும்பிவருகையில் அந்த மலக்கை நோக்கி நீர் எனக்கு ஏதே
னும் வசியத்துசெய்யுமென்று சொல்லவும் அம்மலக்கு சொன்னார்:
ஆய் துல்கர்னைனே! நாளை ரிஸ்குக்கு இன்று துக்கப்படவேண்டாம்.
இனி இன்றை அமலை நாளைக்கென்றுவைத்துக் கொள்ளாதீர். தப்பி
விட்டகாரியத்தைப்பற்றி விசாரப்படாதீர். மெதுவைப்பற்றி பூண்டு
கொள்ளும், வம்பாக இராதீரென்று அந்தமலக்கு வசியத்து செ
ய்து அனுப்பிவைத்தார். அப்பால் துல்கர்னைன் அவர்கள் பொழுது

உதயமாகும் தலத்தை அடைகிறவரையில் நடந்து போகவும் அங்கு பொழுதானது ஒரு கவுமுகள்பேரில் உதயமாகிறதைக் கண்டார்கள். அந்தக் கவுமுகளுக்கு பொழுதின் சூட்டைக்காக்கக் கூடிய உடுமானம் கிடையாது. ஏனெனில் அந்த பூமிசிறுமணலானபடியால் வீடுகள் அதில் நிலைக்கிறதில்லை. அவ்வூர்மெத்தச் சூடானதினால் அவர்களின் முகங்கள் தோலுரிக்கப்பட்டது போலிருக்கும். இன்னும் அவர்களுக்குத் தலைமுடியும் புருவத்து முடியும் சரீரத்தின் முடியும் இல்லை. அவர்கள் பொழுது உதயமாகும்போது தண்ணீரில் அல்லது புடையில்புகுந்துகொள்கிறார்கள். அது உயர்ந்தபின் வெளிதனில்வந்து தங்கள் தீர்பாகத்துக்காக கடலில்போய் மீன்வேட்டையாடுகிறார்கள். அந்த கவுமுகள் இருக்குமிடத்திற்கப்பாலும் சில ஜனங்கள் இருக்கிறார்கள். அப்பால் துல்கர்னைன் அவர்கள் யாஜூஜ் மாஜூஜ் கூட்டத்தை அடைக்கப்பட்டிருக்கிற மலைக்கிடையே எத்துகிறவரையில் வேறுபாதைபிடித்து நடந்தார்கள். அந்த இரண்டுமலையும் துருக்கிதேசம் கடைசியின் பின்புறத்தில் இருக்கிறது. அம்மலைக்குப் புறமேதான் யாஜூஜ் மஜூஜ்கூட்டத்தார் குடியிருக்கின்றார்கள் பின்னர் துல்கர்னைன் அவர்கள் அவ்விடையை அடைந்தார்கள். இதற்கு குர்ஆனில்ஸத்து என்று பேர்வந்து இருக்கிறது. அந்த ஸத்துக்கு முன்பாக துல்கர்னைன் சிலகவுமுகளைக் கண்டார்கள், அவர்கள் பேச்சை வருத்தப்பட்டே அல்லது விளங்கமுடியாது. அன்னவர்கள் துல்கர்னைன் இடம் சொன்னதாவது: இவ்விடத்தில் யாஜூஜ்மாஜூஜ் கூட்டத்தாரிருக்கின்றார்கள். அவர்களோ பூமியில் மெத்தபஸாதுசெய்கிறார்கள். ஆனதினால் நீங்கள் அவர்களுக்கும் எங்களுக்குமிடையில் ஓர்திரையொன்றைபோடுங்கள். அதற்கு நாங்கள் செலவுதருகிறோமென்று சொல்லியபோது துல்கர்னைன் சொன்னார்கள்: நீங்கள் எனக்குயாதொன்றும் தரவேண்டியதில்லை; என்கிலும் நான் உங்களுக்கு சும்மாசெய்துவிடுகிறேன். ஆனால் நீங்கள் இரும்புத் துண்டுகளைக் கொண்டு வாருங்கள் என்றுசொல்ல அவர்கள் அப்படிப்பட்ட இரும்புகளுக்கு நாங்கள் எங்கேபோவோமென்று சொன்னபோது துல்கர்னைன், அவர்களுக்கு அவைகள் விளையும் தலத்தைக் காட்டிக்கொடுக்கவும் அவர்கள்போய் இரும்புகளைக்கொண்டுவந்தார்கள். துல்கர்னைன் இரண்டு மலைக்கிடையிலுள்ள தொலைதூரத்தை அளந்துபார்க்க அது நூறுகாதவழி தொலையாயிருந்தது. உயரம் நூறுமுழம் அகலம் ஐம்பதுமுழமிருந்தன. அதற்குச்சரியாகக்குழிதோண்டிக்கொண்டு அதன்நீளம் அகலம் உயரம் சரியட்டுக்கு இருப்புத்துண்டுகளையும்

விறகுளையும் கரிகளையும் ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்கி அந்த இரும்பு இரண்டுமலையுடைய இருபுறமும் சரியாகவே அதைச்சுற்றி நெருப்பையும் துருத்திகளையும் வைத்து ஊதும்படி வேலைக்காரர்களுக்குச்சொல்லவும் அவ்வாறே அவர்கள் ஊதினார்கள்.

அது நெருப்புப்போலான உடனே துல்கர்னைன் அவர்கள் செம்புகளைக் கொண்டு வரச்சொல்லினார். அவ்வாறே கொண்டுவரப்படவும் அவர்கள் அந்த இரும்பின்பேரில் உருக்கின செம்பை யூற்ற வேலைக்காரர்களும் அப்படியே செய்தார்கள். அப்பொழுது இரும்பும் செம்புமொன்றோடு ஒன்றுசேர்ந்து பாரிய ஒருமுழு மட்டையானமலை போலாகிவிட்டது. அப்பால் யாஜூஜுமாஜூஜு கூட்டத்தார்வந்து அதில் ஏறவும் துளைக்கவும் நாடினார்கள். அதுபிரமாண்டமான உயரமாயிருப்பதினால் அவர்கள் அதின் பேரில் ஏறவும் அதைத் துளைக்கவும் முடியாமலாகிவிட்டது. பிறகு துல்கர்னைன் சொன்னார்: இந்த கிரையையுண்டாக்க எனக்கு வல்லமை கொடுத்தது எனது நாயனின்கிருபை; அவனின் வாக்கியப்பாடாகிய கியாமநாள்வந்திட்டால் அவன் அதை இடித்துவிடுவானென்று இன்னும் ரூகுல் பயானில்வருகிறது: சிக்கந்தர் துல்கர்னைன் அவர்கள் இருள் பூமிக்குப்போய் மீண்டுவந்த பின் ஷஹ்ரென்றபட்டணத்தில் வந்து வபாத்தாகி அடக்கமானார்களென்றும் இன்னும் மற்றோர்களின்படி இரண்டுமலையிடையைக் கட்டிவிட்டு பைதுல் முகத்தசுக்குவந்து அவ்விடத்தில் வபாத்தானார்களென்றும் வருகிறது. றலியல்லாகு அன்கு.

8-வது பஸல் (அல்லாகு தஆலா மூசா அலைகிஸ்ஸலாமை கிலுரு அலைகிஸ்ஸலாமளவில் அனுப்பிய விஷயத்தில் பேசும் பிரிவு)

ஸஹீகுல் புகாரிஸஹீகுல் முஸ்லிம் தப்ஸீர் மஆலிமுத்தன்ஸீல்மற்றும் தப்ஸீருகளிலும் வருகின்றது: ரிவாயத்துஉபையிபுனுகஅபுறலியல்லாகு அன்குஅவர்கள் சொல்லுகிறார்கள்: நான் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்; ஒருபோது மூஸா அலைகிஸ்ஸலாம் பனி இஸ்ராயில்களில் ஒருகுத்பா ஓதினார்கள்; அப்போது ஜனங்கள் அவர்களிடத்தில் மனிதர்களில் மிக அறிந்தவர்கள் யாரென்று கேட்க, அப்போது மூஸா அலைகிஸ்ஸலாம் நான் மெத்த அறிந்தவனென்று சொல்லவும் அவ்வாறு சொன்னதின்பேரில் அல்லாகு சுபுஹானகு வதஆலா அவர்களை வம்பித்து அவர்களுக்கு வஹீ அனுப்பினான். ஆப் மூஸாவே எனது அடியார்களில் நின்றுமொருவர் இரண்டு கடல்சந்திக்குமிடத்தில் இருக்கிறார்; அவர் உம்மைக்காண மெத்த அறிந்தவரென்றுசொல்ல

அப்போது மூஸா அலைகிஸ்ஸலாம், ஆய் எனது நாயகா! நான் எப்படி அவரிடத்தில் போய்ச் சேருவேன் என்றார்கள். அப்போது அல்லாகுதஆலாவின் நாக்குமுவந்தது: ஆய்மூஸாவே! நீர் ஒரு கூடையில் பொரித்தமீன் ஒன்றை எடுத்துக்கொண்டு நடந்துபோம்; அது எவ்விடத்தில் காணாமல் போயிற்றோ அவ்விடத்தில்தான் அவரிருப்பார் என்றுசொன்னான். பின்பு மூஸா அலைகிஸ்ஸலாம் மீனை எடுத்து அவர்களின் காதிமாகிய யூஷஉ அலைகிஸ்ஸலாம் இடம் கொடுத்து இருவர்களும் நடந்து சஞ்சாரம் செய்தவர்களாய் ஒரு பாறைக்கல்லின் சமீபத்தில் வந்து சேர்ந்தபோது மூசா அலைகிஸ்ஸலாம் நடந்து வந்த அலுப்பினால் அக்கல்லின்பேரில் தலைவைத்து நித்திரை கொண்டார்கள். இது நிற்க அந்தமீன் கூடையைவிட்டு வெளிப்பட்டு தானும் பினதாய் சமுத்திரத்தில் சுரங்கம் செய்துகொண்டுபோயிற்று. அல்லாகுதஆலா பொரித்த மீன்பேரில் தண்ணீர் ஓடுகிறதை தடுத்து விட்டான். அதுமாடம்போலாகி விட்டது. பிறகு மூஸா அலைகிஸ்ஸலாம் விழித்தார்கள். அப்போது யூஷஉ அலைகிஸ்ஸலாமுக்கு அந்த மீன்காணமற் போயின சமாசாரத்தைக் குறித்து மூஸா அலைகிஸ்ஸலாமிடம் சொல்ல ஞாபகமில்லாமற்போனது. அப்பால் அந்தப்பகல் இரவு முழுமையும் நடந்து மறுநாள் சுபுகுஆகியபோது மூஸா அலைகிஸ்ஸலாம் யூஷஉ அலைகிஸ்ஸலாமிடம் நம்முடைய காலை ஒஜீபனத்தைக்கொண்டுவாரும்; நாம் இத்தஸபரில்மெத்த வருத்தத்தை அடைகிறோம் என்றுசொன்னார்கள். இதுநிற்க மூசா அலைகிஸ்ஸலாமை எங்கேபோயிருக்கும்படி கட்டளை கொடுக்கப்பட்டிருந்ததோ அதைக் கடந்துபோனதினால் அவர்களுக்கு வருத்தம் தோன்றிற்று. பின்னர் யூஷஉ அலைகிஸ்ஸலாம் மூஸா அவர்களுக்குச் சொன்னதாவது: நாம அந்தக்கல்லில் நித்திரைகொண்டபோது அம்மீன் உயிர்பெற்று போயிற்று. ஆகிலும் நான் அதுவிஷயத்தை தங்களுக்குச் சொல்வதை விட்டும் ஷெய்த்தான் என்னை மறக்கடித்து விட்டான் என்றும், அந்தமீன் ஆச்சரியமுற்ற நடப்பைக்கொண்டு கடலில் பாதையை உண்டாக்கினதாகப் போயிற்று என்றும் சொன்னார்கள். அப்போது மூஸா அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள்:

நாம் யாரைத் தேடிவந்தோமோ அவர்கள் அங்குதானிருக்கிறார்களென்று சொல்லிவிட்டு இருவர்களும் தங்கள் பாதத்தின் தடத்தைக்கண்டு பிடித்து பழைய கல்லில் வந்துசேரவும் அங்கு கிழுரு அலைகிஸ்ஸலாம்ஒரு போர்வையை போர்த்தினவர்களாக உட்கார்ந்திருப்பதைப்பார்த்துமூசா அலைகிஸ்ஸலாம் அவர்களுக்குசலாம் சொல்

லவும் அவர்கள் ஜவாபு சொல்லிவிட்டு நீர் யாரென்று கேட்டார்கள்.
அவர்கள் நான் மூசா என்று சொல்ல அதற்கவர்கள் நீர் பனீ இஸ்ரு
வீல்களிலுள்ள மூசாவா என்று கேட்க அவர்கள் ஆமென்று சொல்
லிவிட்டுச் சொன்னதாவது: நான் தங்களிடம் வந்திருக்கிறேன்; ஆன
தால் தங்களுக்கு படித்துக் கொடுக்கப்பட்டிருக்கிற இல்மை நீங்கள்
எனக்குபடித்துக்கொடுங்களென்று கேட்க அவர்கள் சொன்னார்கள்:
அய்மூசாவே அல்லாகுதஆலா எனக்கு சில இல்மைபடித்துக் கொடு
த்திருக்கிறான்; அதைநீர் அறியமாட்டீர்; இன்னும் சில இல்மை உம
க்குபடித்துக் கொடுத்திருக்கிறான்; அதை நான் அறியமாட்டேன்
என்றபோது மூசா அலைகிஸ்ஸலாம் நான் இதைப் படிக்கிறதற்காக
வேண்டி தங்களைத் தொடருகிறேன் என்றுசொல்ல கிலுரு அலைகிஸ்
ஸலாம்சொன்னதாவது: அய்மூஸாவே! நீர் அதின்பேரில் ஸபூர்செய்
வதற்கு சக்தி பெறுவதுமன்றி அதைக்கொண்டு அறிவதுமல்லாமல்கூடா
தகாரியமாக இருக்க எவ்வாறு நீர் அதின்பேரில் ஸபூர்செய்வீரென்று
சொல்ல மூசா அலைகிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்: அல்லாகு
தஆலா நாடினால்நீங்களென்னை ஸபூர் செய்தவர்களாக காணுவீர்கள்;
நான் தங்களுடைய எந்த ஒரு முக்கும் சிறிதும் விகற்பம் செய்யமா
ட்டேன் என்றுசொல்லவும் அதற்கு கிலுரு அலைகிஸ்ஸலாம் சொன்
னதாவது: அப்படி நீர் என்னைத்தொடர வேண்டுமாகில் நான் எந்த
வஸ்துவின் சமாசாரத்தையும் உமக்கு அறிவிக்கிறமட்டிலும் நீர் அ
தைக்குறித்து என்னிடம் கேட்கக்கூடாதென்று சொல்லிவிட்டு இரு
வர்களும் கடலோரமாக நடந்து வருகிறபோது அத்திசையாய் ஒரு
கப்பல்வரவும் அக்கப்பலுடையவர்களிடம் கிலுரு அலைகிஸ்ஸலாம் எ
ங்களையும் அதில் ஏற்றிக்கொள்ளுங்களென்று சொல்ல அக்கப்பலு
டையவர்பணம் காசு யாதொன்றும் வாங்காமல் சும்மா ஏற்றிக்கொ
ண்டார் அப்பொழுது ஒரு குருவி கப்பலின் ஓரத்தில்வந்து உட்கார
ந்துகொண்டு தன்சொண்டை சமுத்திரத்தில்விட்டு இரண்டொரு
மிடறுதண்ணீர்குடித்தது. அப்போது கிலுரு அலைகிஸ்ஸலாம்சொன்
னார்கள்: அய்மூசாவே! உம்முடைய இல்மும் நமது இல்மும் அல்லா
குதஆலாவின் இல்மவில் சேர்த்துப் பார்த்தால் அக்குருவிசொண்டு
கொண்டு அள்ளிய தண்ணீர்மாத்திரமே ஒழியவேறில்லை என்றார்கள்
பின்புகப்பல்போகும்போது திடீரென்று கிலுரு அலைகிஸ்ஸலாம் ஒரு
விதமான ஆயுதத்தினால் கப்பலில் நின்றுமுள்ள பலகையைக் கழற்ற
வும்மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்களைப் பார்த்து நீங்கள் என்னவேலை
செய்கிறீர்கள்? அக்கப்பலுடையவர்கள் நம்மிடம் யாதொன்றும் வாங்

காமல்சும்மா ஏற்றிக்கொண்டார்கள் அப்படியிருக்க, நீங்கள் அக்கப்பலை பின்னப்படுத்துவதுமல்லாமல் கப்பலுடையவர்களைக் கடலில் மூழ்கச்செய்யவாநாடுகிறீர்கள்? இது மெத்தப் பழிப்பானகாரியம்;" என்றுசொல்ல, அதற்கு கிலுரு அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள்: "ஆய் மூசாவே! நீர்ஸபூரு செய்ய சக்திபெறமாட்டீரென்று நான் உமக்குச்சொல்லவில்லையா" வென்றார்கள். அவ்வாறு சொல்லவும் அதற்கு மூஸா அலைகிஸ்ஸலாம், "ஆம்; நான் தாங்கள்சொல்லியதை மறந்திட்டேன். ஆனதுபற்றித் தாங்கள் அதின்பேரில் என்னிடம் குற்றம் பிடிக்காதீர்கள்" என்று சொன்னார்கள்.

ரிவாயத்து:-நாயகம் கிலுருஅலைகிஸ்ஸலாமும் மூசா அலைகிஸ்ஸலாமும் கப்பலைத்தேடிக் கடலோரம் போகவும் கப்பல்வந்தது. பின்னர் இருவர்களும் கப்பலில் ஏறியபோது, அக்கப்பலில் இருக்கப்பட்டவர்கள், கப்பலுடையவனுக்கு, "இவர்கள் இரண்டுபேரும் திருடர்கள்" என்றுசொல்ல, அவர்களுக்குக் கப்பல்காரன், "இவர்களின் முகம் நபிமார்களுடைய முகம்போலிருக்கிறதை நான்பார்க்கிறேன்" என்றுசொல்லிவிட்டு, காசுபணம் வாங்காமல் அவர்களைச் சும்மாஏற்றிக்கொண்டான். பின்புகப்பல்ஆழியகடலில்போனபோது, கிலுருஅலைகிஸ்ஸலாம் அவர்கள், கப்பலில் தண்ணீருக்குச்சமீபமாய் அடித்துள்ளபலகை ஒன்றைக்கழற்றிவிட மூசா அலைகிஸ்ஸலாம் தங்களுடைய வஸ்திரத்தினால் அதை அடைத்தார்கள் அப்போதுகிலுரு அலைகிஸ்ஸலாம். அவர்கள், ஒருபளிங்கிக்கல்லை எடுத்து அதற்கு அண்டைபோட்டார்கள்.

ரிவாயத்து:-கிலுருஅலைகிஸ்ஸலாம் கப்பலை ஓட்டையாக்கவே, மூஸாஅலைகிஸ்ஸலாம் ஒருபக்கம் தனியாகஇருந்து, மனதிற்குள் சொல்லிக்கொண்டிருந்தது என்னவெனில், "நாம் இவர்களைத்தொடர்ந்து என்னசெய்யபோகிறோம்; நாம்பனிஇஸ்றாயீல்களிடமிருந்தாலும் அக்கியும் சக்தியும் அவர்களுக்கு அல்லாகுதஆலா உடையவேதத்தை வோதிக்காட்டலாம்; அவர்கள் நமக்கு வழிப்படுவார்கள்" என்று அவர்கள் மனதில் நினைத்தார்கள். அந்நினைப்பு முடிவதற்குள், அவர்களை நோக்கி கிலுருஅலைகிஸ்ஸலாம் சொன்னதாவது: "ஆய் மூசாவே! நீர் உமதுமனதில் நினைத்ததை இப்போது நான் உமக்குச் சொல்லவா" என்றார்கள். அதற்கு மூசாஅலைகிஸ்ஸலாம் "அப்படியே சொல்லுங்கள்" என்றார்கள். அப்போது கிலுருஅலைகிஸ்ஸலாம் அவர்கள் நினைத்ததெல்லாம் விவரமாகச் சொல்லவும், மூசா அலைகிஸ்ஸலாம் அதெல்லாம் உண்மை என்று ஒப்புக்கொண்டனர்.

அப்பால் கிலுரு அலைகிஸ்ஸலாமும், மூஸா அலைகிஸ்ஸலாமவர்களும் கப்பலைவிட்டிறங்கிக் கடலோரமாய்ப் போகிறபோது, கிலுரு அலைகிஸ்ஸலாம் வழியில் ஒரு பையனைக்கண்டார்கள். அவன்மற்றும் பிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருந்தான். அவர்கள் அவனைத் தங்கள் கையினால் அவனின் தலையைப்பிடித்து முறுக்கிவிட அல்லது ஒரு கவுலின்படி கத்தியைக்கொண்டு அறுத்துவிட, அவன் மரணமடைந்தான். அப்போது மூசா அலைகிஸ்ஸலாம் கிலுரு அலைகிஸ்ஸலாமை நோக்கி, " நீங்கள் தப்புரவான ஒரு ஆத்மாவை யாதொரு பிழை இல்லாமல் கொன்றுவிட்டீர்கள்; இதுவோமெத்த பழிப்பான காரியம்" என்று சொல்லவும், கிலுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள், மூசா அலைகிஸ்ஸலாமுக்கு, "நீர் என்னுடன் சபூரு செய்ய சக்தி பெறமாட்டீரென்று நான் உமக்குச் சொல்லவில்லையா" என்று சொல்ல, அவர்கள் ஆமென்று சொல்லிவிட்டு, "நான் இனிமேல் தங்களிடத்தில் எந்த கருமத்தைக் குறித்தும் கேட்டால் நீங்கள் என்னைச் சேரவேண்டாம்; எங்கிலும் நான் தங்களிடத்தில் அனுத மன்னிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார்கள்.

ரிவாயத்து-கிலுரு அலைகிஸ்ஸலாம் அப்பையனைக்கொல்லவே மூஸா அலைகிஸ்ஸலாம், அவர்களைப்பார்த்து, "நீங்கள் மெத்த குறைத்தலான காரியத்தைச் செய்துவிட்டீர்கள்" என்று சொல்லவும், கிலுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் கோபமுற்று, அந்தப்பையனின் புயத்தின் தோலை உரிக்கவும், அதில் "ஹாதாகாபிருன்லா யூமினுபில்லாஹி இவன் காபிரானவன்; அல்லாகுத ஆலாவைக்கொண்டு ஈமான் கொள்ளமாட்டான்" என்று எழுதப்பட்டிருந்தது.

அப்பால் இருவர்களும் அவ்விடத்தை விட்டுப் பிரயாணித்து ஒரு சிறிய நாட்டினிடமாக வந்து சேர்ந்தனர். அந்தவூரின் பேர் 'அந்தாக்கியா' வென்று சொல்லப்படும். அங்குவந்து அவர்களிருவரும் அவ்வூரையுடையவர்களிடம் விருந்து தேடினதில் அவர்கள், இவர்களுக்கு விருந்து கொடுத்தார்களில்லை. பின்னர் அங்கு நூறுமுழம் உயரத்தில் ஒரு சுவர் இடிந்து விழுகிறதாக இருந்தது. கிலுரு அலைகிஸ்ஸாம் தங்கள் கையைக்கொண்டு அதற்கு சாடைகாட்டவே, அது நேராய்நிமிர்ந்து விட்டது. அப்போது மூஸா அலைகிஸ்ஸலாம், கிலுரைப்பார்த்து, "நாம் அவர்களிடம் விருந்துதேடினோம்; அவர்கள் நமக்கு விருந்தளித்தார்களில்லை; அப்படியிருக்க ஏன் நீங்கள் அவர்களின் சுவரைநேராக நிமிர்த்தினீர்கள்? அவ்வாறு நீங்கள் நிமிர்த்தி

யதைப் பார்த்தால் அதன்பேரில் கூலி எடுத்துப் புசிப்பதை நாடியதாகத் தெரிகின்றது" என்றார்கள்.

ரிவாயத்து: கிழுரு அலைஹிஸ்ஸலாமும் மூஸா அலைஹிஸ்ஸலாமும் அந்தாக்கியா என்னும் ஊருக்கு வந்தபோது அவ்வூரார்களிடம் ஒஜ்பணம் தேட, அவர்கள் கொடுத்தார்களில்லை. அதைப்பற்றி அல்லாகு தஆலா, குர்ஆனில் ("பஅபவ் அன்யுளைய்யிபூஹுமா) யஅனி அந்தவூர்க்காரர்கள் அவர்களிருவருக்கும் ஒஜ்பணம் கொடுப்பதை விட்டும் விலகிக்கொண்டார்கள்" என்று சொன்ன இச்சமாசாரத்தை அந்தவூரார், அறிந்து நபிசல்லல்லாகு அலைஹிஸ்ஸல்லமிடம் அநேக தங்கங்களைக் கொண்டு வந்து கொடுத்து, "எங்களைப்பற்றி அல்லாகுதஆலா சொன்ன பழிப்பை நீக்க நாடுகிறோம்; ஆனதால் தாங்கள் (பஅபவ்) என்னும் சொல்லிலுள்ள பேயை தேயாக்கிப் புரட்டி (பஅதவ்) என்று ஆக்கிவிடுங்கள்" என்று சொன்னபோது, நபிநாயகம் சல்லல்லாகு அலைஹிஸ்ஸல்லம், "அல்லாகுதஆலாவின் கலாமைப் புரட்டுகிறது அவனின் சொல்லில் பொய் சேருவதை வருத்திவைக்கும்; ஆதலால் அப்படிச்செய்ய முடியாது" என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டார்கள். (தகிளா பஅபவ் அன்யுளைய்யிபூஹுமா) என்றால் அதின் பொருள், 'அந்தவூர்க்காரர்கள் அவர்களிரண்டு பேருக்கும் விருந்து கொடுப்பதைவிட்டு விலகிக்கொண்டார்கள், என்பதாம். (பஅதவ்) என்றாக்கினால் அதின் பொருள், அந்தவூர்க்காரர் அவர்களுக்கு விருந்து வைக்க வந்தார்கள், என்பதாம்.

அப்பால் கிழுரு அலைஹிஸ்ஸலாம் மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு சொன்னார்கள், "இதுதான் உமக்கும் நமக்கும் இடையில் உண்டான பிரிவினை; ஆனதால் நான் முந்திச்செய்து வந்த மூன்று காரியத்தின் மருமத்தை இப்போது உமக்கு அறிவிக்கிறேன்; அறிந்து கொள்ளும் 1-வது காரியம்: நாம் இருவர்களும் ஏறிய கப்பலானது கடலில் வேலை செய்யும் மிஸ்கின்களுடையதாக இருக்கும்; நான் அதை பின்னப்படுத்தியகாரணமாவது: அந்தக்கப்பலுக்குப் புறமே ஒரு ராஜன் வந்தான்; அவன்பேர் ஜலந்து. அவனுடைய வழக்கம் எந்தக்கப்பல் நன்றாக இருந்ததோ அதை வலுவந்தமாகப் பிடுங்கிக் கொள்ளுகிறதாக இருந்தது. ஆகையினால் நான், அதை பின்னப்படுத்தினேன்" என்றார்கள். 2-வது காரியம்: நான் கொன்றேனே அந்தப்பையனின் தாய் தந்தையர் முஸ்லிமானவர்கள்; அவன் காபிர்; அவனின் காரணத்தால் அவர்களிருவரும் காபிரராகிப், போவார்களென்று பயந்து நான் அவனைக்கொன்று விட்டேன்; ஏனெனில், அல்லாகுதஆலா

அவர்களுக்கு அவனைவிட அதிக கிருபையுள்ள பிள்ளையை நன்கொடையாகக் கொடுப்பதை நாடி இப்படிச்செய்தேன் என்றார்கள்.

ரிவாயத்து: ஸஹீஹுல் புகாரி ஸஹீஹுல் முஸ்லிம் என்ற இருகிதாபிலும், உபையிபுனுக அபுறலியல்லாகு அன்ஹுவைத் தொட்டும் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது: நாயகம் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள்: "கிலுரு அலைகிஸ்ஸலாம் கொன்றார்களே அந்தப் பையனாகிறவன், குபுறாக தெரிக்கு கொள்வானென்றும். அவனின் ஒடுக்கம் குபுறைக்கொண்டு தான் முடியுமென்றும் தக்தீரில் எழுதப்பட்டிருந்தது" என்று.

இன்னுமொரு ஹதீதில் வருகிறதாவது? "நாயகம் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள்: அந்தப் பையன் ஹயாத்தாக இருந்தானேயானால் அவன் தாய் தந்தை இருவரும் அவனை உகந்ததற்காக வேண்டியே அவனைத் தொடர்ந்து காபிராகி விடுவார்கள்" என்று.

ரிவாயத்து: "அந்தப்பையனுக்குப் பிறகு அவனின் தாய்தந்தையர்களுக்கு அல்லாகுத்தஆலா ஒருபெண்குழந்தையை நன்கொடையாகக்கொடுத்தான் அதை ஒரு நபி விவாகு செய்து அதில் நின்றும் ஒரு நபி பிறந்தனர் அந்த நபியைக்கொண்டு ஒருஉம்மத்து நேர்வழி பெற்றார்கள்" என்று.

3-வதுகாரியம்:- "நான் நிலைநிறுத்திய சுவராகிறது இரண்டு எதீமான குழந்தைகளுக்குடையது; அதின் கீழ் அவ்விருவர்களுக்கும் திலபுதையல்கள் வைக்கப்பட்டிருந்தன அவர்களின் தகப்பனார் சாலிஹான மனிதராகஇருந்தார். அதற்காகத்தான் உம்முடைய நாயன் அக்குழந்தைகள் சரியாக வாலிபப்பிராயத்தை அடைந்து தங்களுடைய புதையலை எடுத்துக்கொள்ள நாடி அவர்கள்பேரில் இவ்வாறு கிருபைசெய்தான்" என்று சொன்னார்கள்.

அதன்மேல் அவர்கள் மூசாவை நோக்கி, "ஆய்மூசாவே' நான் இந்த மூன்று காரியத்தையும் என்னுடைய யோசனையாகச் செய்யவில்லை; அல்லாகுத்தஆலாவுடைய உத்திரவுகொண்டுதான்செய்தேன்; என்னிலும் நீர் அதின்பேரில் சபுருசெய்ய சக்திபெற்றீர் இல்லை" என்று சொன்னார்கள்.

ரிவாயத்து: உஸ்மான் றலியல்லாகு அன்குசொன்னார்கள் அச்சுவற்றின்கீழ் இருந்தபுதையலாகிறது தங்கத்தில் நின்றுமுள்ள ஒரு பலகையாம் அதில் எழுவரிகள் எழுதப்பட்டிருந்தது [illegible]

ஒருவன் மவுத்தை அறிந்து சிரிக்கிறானே அவ்வொருவனுக்கே நான்
புதுமையாகிறேன் இரண்டாவது வரியில் ஒருவன் துன்யாவை பஞ்
சென்று அறிந்து அதில் மேல் வெள்ளையாகிறானே அவ்வொருவ
னுக்கே நான் புதுமையாகிறேன். மூன்றாவது வரியில் கருமமடங்கலும்
அல்லாகுதஆலாவின் (கலாகதரு) கொண்டாக இருக்குமென்று அறிந்
துதப்பிவிட்டதை குறித்துகவலைகொள்கிறானே அவ்வொருவனுக்கே
நான் புதுமையாகிறேன் நாலாவதுவரியில் ஒருவன் கியாமத்துநாளின்
கேள்விகணக்கை அறிந்து நல்ல அமல் செய்யாமல் பணம் காசு திர
வியங்களை சேகரம் செய்து வருகிறானே அவ்வொருவனுக்கே நான்
புதுமையாகிறேன் ஐந்தாவதுவரியில் ஒருவன் நரகத்தை அறிந்துபாவ
தோஷங்களை செய்து வருகிறானே அவ்வொருவனுக்கே நான் புது
மையாகிறேன் ஆறாவது வரியில் ஒருவன் அல்லாகுதஆலாவை உண்
மையாக அறிந்து அவனல்லாதவனை கொண்டு திக்ருசெய்கிறானே அவ்
வொருவனுக்கே நான் புதுமையாகிறேன். ஏழாவது வரியில் ஒரு
வன் சொர்க்கத்தை உண்மையாக அறிந்து துன்யாவைகொண்டு ருக
த்துதேடுகிறான் இன்னும் ஷெய்த்தானை பகையென்று அறிந்து
அவனுக்கு வழிப்படுகிறானே அவ்வொருவனுக்கே நான் புதுமையா
கிறேன் என்று அப்பலகையில் எழுதப்பட்டிருந்ததாம் இன்னும் தப்
ஸீரு மஆலிமுத்தன்ஸீலில் வருகிறது அப்பலகையின் மற்றொருபக்
கத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது அதின் பொருள்.

யெஅனி நான் அல்லாகுதஆலாவாக யிருக்கும் என்னைத்தவிர
வணக்கத்திற்கு பாத்திரவான் யாருமில்லை. நான் தனித்தவன் எனக்
கு இணை துணை யாதொன்றுமில்லை. நான் நலமையும் தீங்கையும்
படைத்தேன் ஒருவன் அவனை கைநலகில் படைத்தானே அவ்வொ
ருவனுக்கே சுபசோபனம் என்று எழுதப்பட்டிருந்தது இமாம்ஜஅப
ரிபுனி முஹம்மத் ரஹீமஹுமல்லாஹு சொன்னார்கள் அந்தசாலி
ஹான தகப்பனென்றது அக்குழந்தைகளின் ஏழாவது பாட்டனார்
அவர்தான் அப்புதையலை புதைத்துவைத்தவர் அவரின் சாலிஹூ
தனத்தின் பொருட்டால் அவ்விருவர்களுடைய முதலையும் நப்ஸையும்
காக்கப்பட்டது.

ரிவாயத்து: முஹம்மதுப்னுல் முன்கதிருசொன்னார்கள் அல்லா
குதஆலாவாகிறவன் ஒரு சாலிஹாகிய அடிமையுடைய சாலிஹுதன
த்தைக்கொண்டு அவனின் பிள்ளையையும் அவனுடைய பிள்ளையுடைய
பிள்ளையையும் அவனின் கூட்ட குடும்பத்துகளையும் அவனிருந்த
கோணங்களையும் அவனைசுற்றி இருக்கும் வீடுகளையும் காக்கப்பட்டு

அன்னவர்கள் நீங்காமல் அல்லாகுத்தஆலாவுடைய காவலிலிருப்பார்கள் என்று இன்னும் ஹையாதில் ஹையவான் என்ற கிதாபில் சுஹைறலி ரலியல்லாகு அவர்களைக் குறித்தும் வந்திருக்கிறது என்னவெனில் மூசா அலைகிஸ்ஸலாமும் கிலுறு அலைகிஸ்ஸலாமும் பிரிகிறதை நாடிய போது கிலுறு அலைகிஸ்ஸலாம் அவர்களைப்பார்த்து ஆய்மூசாவே! நீர் என்னுடன் சபூருசெய்து இருந்தீரானால் ஆயிரக்கணக்கான ஆச்சரியமுற்ற விநோதங்களை காண்பித்து கொடுப்பேன் அது ஒவ்வொன்றும் இப்போது நீர்பார்த்ததைவிட மெத்த புதுமையாக இருக்குமென்றுசொல்லவும் மூசாஅலைகிஸ்ஸலாம் அவர்களைபிரிகிறதினால் மனமுரிந்து அழுதவர்களாகசொன்னார்கள் அல்லாவுடைய நபியே நீங்கள் எனக்கு ஏதேனும் வசிய்யத்துசெய்யுங்களென்று சொல்ல கிலுறு அலைகிஸ்ஸலாம் சொன்னதாவது: ஆய் மூசாவே! நீர் உம்முடைய ஹிம்மத்தை மீளும் தலமாகிய ஆகிரத்துக்கு நல்ல இபாதத்து செய்கிறதை தெரிந்துகொள்ளும் இன்னும் எந்த ஒருவஸ்து உமக்கு பிரயோஜனத்தைகொடுக்கவில்லையோ அதனருகில் திரும்பிப்பாராமல் அச்சந்தீர்ந்து இருக்கிறவேளையில் பயத்தைவிட்டுவிடாமல் பயங்கொண்டு இருக்கிறவேளையில் ஆசைமுரிந்தவராக ஆகா நீர் இன்னும் உமது எந்தவேலையிலும் கலந்து ஆலோசனை செய்யும். இன்னும் உமக்கு எந்தமட்டுக்கும் சக்தி இருந்ததனவோ அதுவரையிலும் யாருக்காவது இஹ்சான் என்னும் உபகாரத்தை செய்வதைவிட்டு விடாதையும் என்றுசொல்லி முடிக்க திரும்பவும் மூசா அலைகிஸ்ஸலாம் அவர்களிடத்தில்இன்னும்எனக்குவசிய்யத்து செய்யுங்கள் என்று சொன்னபோது கிலுறு அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள் ஆய் மூசாவே! நீர் யாரிடமும் ஒருபோதும் வம்பு வழக்கு செய்யாதீர் எந்த இடத்திற்கும் அவசியமன்றி போகாதீர் ஆச்சரியமற்ற காரியங்களை தொட்டு சிரியாதீர் ஆய் இம்றானுடைய குமாரரே! நீர் பாவிகளைப்பற்றி அவர்கள் பாவம் செய்துவிட்டு அதின் பேரில் கைசேதம் கொண்டபிறகு அவர்களின் பாவ தோஷத்தைக் குறித்து வின்னம் பேசாதீரென்று சொல்லவும் மூசா அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள். ஆய் கிலுறே! நீங்கள் எனக்கு நல்ல வசிய்யத்து செய்தீர்கள். ஆதலால் அல்லாகுதஆலா உங்கள்பேரில் அவனுடைய நிஃமத்துகளை நிரப்பமாக்கி இன்னும் உங்கள் வாழ்நாளை அவனுடைய இபாதத்திலே திருப்பி அவனின்பகையிலனை விட்டுக் காத்துக் கொள்வானென்று சொல்லி முடிக்கவும். கிலுறு அலைகிஸ்ஸலாம் அவர்கள் மூசா அலைகிஸ்ஸலாமை நோக்கி நீங்கள் எனக்கு

ஏதேனும் வசியத்து செய்யுங்களென்று சொன்னபோது அவர்கள் ஆப்ஜிறுதே! நீங்கள் கோபத்தைவிட்டுத் தப்பித்துக் கொள்ளுங்கள் அல்லாஹுத்தஆலாவுடைய பாதையிலொழிய [illegible] ருக்கிறவர்களாக ஆகிவிடாதீர்கள் இன்னும் [illegible] [illegible] [illegible] அல்லது மனிதனைப் [illegible] தீர்கள் ஏனெனில் அதாவது [illegible] நீங்கள் குப்ரில் விழுந்துவிடக்கூ டும் என்று சொல்லவும் கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்த்து நீர் எனக்கு மெத்த நல்ல வசியத்து செய்தீர் அல்லாஹுத்ஆலா உம்மை அவனின் வழிபாட்டின் பேரில் நிலைநிறுத்தி உம்முடைய வேலைகளில் அவனுடைய சக்தியைக் கொடுத்து அவனுடைய அடியார்களை உமது பேரில் [illegible] அவனின் வசிகளை உமது பேரில் திறப்பானாகவும் என்று சொல்லவும் மூஸா அலைஹிஸ்ஸலாம் ஆமீன் சொல்லி முடித்தார்கள். இன்னும் இரவும் முழு மெல்லென்று பகலில் [illegible] தங்கள் தரையில் எழுதி இருந்தார்கள். [illegible] மூஸா அலைஹிஸ்ஸலாம் பிரிந்துபோகும்பொழுது அவர்கள் கிலுரு அலைஹிஸ்ஸலாம் இடத்தில் தாங்கள் எனக்கு ஏதேனும் வசியத்து செய்யுங்களென்றபோது அவர்கள் [illegible] அப்போது நீர் [illegible] [illegible] செய்யவேண்டும் என்று [illegible] இப்படி படிக்காதீர் மேலும் அல்லாஹ்வுக்காக அமல் செய்யவேண்டுமென்று [illegible] இப்படி படித்துக்கொண்டு வெளிப்பட்டார்கள்.

[illegible] மூஸா அலைஹிஸ்ஸலாம் கிலுரு அலைஹிஸ்ஸலாம் [illegible] போது அவர்கள் சொன்னார்கள் ஆப்ஜிறுதே! நீங்கள் எனக்கு வசியத்து செய்யுங்களென்று சொல்ல அதற்கவர்கள் அப்படியானால் நீர் மனிதர்களுக்கு [illegible] செய்பவராக [illegible] செய்கிறவராக இருந்[illegible] [illegible] இராதீர் [illegible] அவர்களின் பாவ [illegible] சொல்லாதீர் நீர் ஜீவித்திருக்கும் காலமெல்லாம் உம்முடைய பாவத்தை நினைத்து அழுதும் இன்[illegible] [illegible] [illegible] வசியத்து சொல்லிவிட்டு கிலுரு அலைஹிஸ்ஸலாமவர்கள் மூஸா அலைஹிஸ்ஸ

ரைப்பார்த்து 'இப்போது நீர் எனக்கு வசியம் செய்து கொடும்' என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் அய்கிழுறே! நீங்கள் அல்லாகுதஆலா உடைய கருமத்திலே அல்லாது கோபம் கொள்கிறதை நான் உங்களுக்கு அச்சம் மூட்டுகிறேன். நீங்கள் துன்யாவை முதுகுப்பக்கத்து வைக்கிறீர்கள், பின்னுமில் அதுசமயான போக்கிருப்பில் கொண்டுவந்து தள்ளிவிடும், என்று வசியத்து செய்யவும், கிலுறு அலைஹிஸ்ஸலாம் 'அய்மூசாவே! நீர் எனக்கு மிக்க கட்டமான வசியத்தைக் கொண்டு வசியத்து செய்தீர், என்றுசொன்னார்கள். பின் இருவர்களும் ஒருவர்க்கொருவர் துஆ கேட்டவர்களாகப் பிரிந்தார்கள்.

9-வது பஸல். நாயகம் கிலுறு அலைஹிஸ்ஸலாம் தங்கள் நப்ஸை அல்லாவுக்காக விற்றதின் பேசும்பிரிவு.

முன்ஜிம் கபீருல் ஹதீதாமில் இமாம் தபுறானி, றஹிமகுல்லா அபீ உமாமா, றலியல்லாகுவைத் தொட்டும் ரிவாயத்து செய்திருக்கிறார்கள்: என்னவெனில், நாயகம் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லாம் அவர்கள் சஹாபாக்களை நோக்கி, நான் உங்களுக்கு கிலுறு அலைஹிஸ்ஸலாமுடைய சமாசாரத்தைப்பற்றிச்சொல்லவா என்றபோது, சஹாபாக்கள் ஆம்சொல்லுங்களென்றார்கள். அப்பொழுது நாயகம் றசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லம் இருவுளம்பற்றினார்கள்: ஒருநாள் கிலுறு அலைஹிஸ்ஸலாம் பனீஇஸ்றாயீல்களுடைய கடைவீதியில் போகும்போது இடையென்று உரிமைச்சீட்டெழுதிக்கொடுக்கப்பட்டவனொருவன் அவர்களைப்பார்த்து உங்களுக்கு அல்லாகு தஆலா பறக்கத்தை கொடுப்பான்; தாங்கள் எனக்கு ஏதேனும் கொடுங்களென்றான். அதற்குக்கொடுக்க என்னிடம் யாதொன்றுமில்லையாதென்று கிலுறு சொல்ல அவன் திரும்பவும் அவர்களிடம் (விவஜ்ஹில்லா) பஅனீ அல்லாவுக்காக வேண்டியேனும் கொடுங்கள்; நான் உங்களுடைய திருமுகத்தில் இரக்கத்தைப்பார்க்கிறேன். இன்னும் நான் உங்களில் கின் புபறக்கத்தையும் ஆதரவுவைக்கிறேனென்றான். அப்போது கிலுறு அலைஹிஸ்ஸலாம் என்னிடம் யாதொன்றுமில்லை. ஆகிலும் நீ என்னுடன் நடந்துவாரும் என்றுசொல்லிப் போகிறபோது அவர்கள் பகீரே நீர் என்னைவிற்றுப்போடுமென்றுசொல்லவும், அவன் இதென்னவேலை; இது நடக்கக்கூடிய காரியமாவென்று சொல்ல, அதற்கு கிலுறு அலைஹிஸ்ஸலாம் ஆப்பகீரே! நீ என்னிடத்தில் பெரிய வலுப்பமான காரியத்தைக்கொண்டு சுவால்செய்தாய்; அதாவது (விவஜ்ஹில்

லா) மெஅுள் அல்லாவுக்காக வேண்டிக்கொடுமென்று கேட்டுவிட்டாயநான் என்னிடம் அன்பில்லாதவனாக ஆகமாட்டேன், ஆனதினால் நீ என்னை விற்றுப்போடுமென்றார்கள், பின்னர் பகீரு அவர்களைப்பிடித்து கடைவீதிக்குக் கொண்டுவந்து ஒருமனிதனிடம் எண்ணூறு திரகத்துக்கு விற்றுப்போட்டு அந்த பகீர் போய்விட்டான். பிறகு கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம்மைவாங்கின மனிதனிடத்தில் சிலகாலம் சும்மா இருந்தார்கள். அம்மனிதன் அவர்களிடத்தில் யாதொரு வேலையும் வாங்கவில்லை; பின்பு அவர்களே அம்மனிதனிடத்தில், 'ஆய்மனிதனே! நீர் என்னை வேலை கொள்வதற்காக வேண்டி வாங்கினீர்; அப்படியிருக்க நீர் எனக்கு வேலை கொடுக்காமலிருக்கிறீர்; ஏதாகிலும் ஒருவேலை செய்யும்படி கட்டளை இடும்' என்று சொல்ல, அவர், 'நான் உமக்கு வருத்தத்தைக் கொடுக்க நாடவில்லை; ஏனெனில் நீர் வயது சென்ற மனிதராக இருக்கிறீர்' என்றார். அதற்கு கிலுறு அலைஹிஸ்ஸலாம், 'நீர் ஏவுகிற வேலை செய்ய எனக்கு யாதொரு கஷ்டமுமில்லை' யென்று சொல்ல, அவர், 'நல்லது நீர் இதோ அங்கு கிடக்கிற கல்லை எடுத்து இன்னவிடத்தில் கொண்டுபோய்ச் சேரும்' என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு, அவர் ஏதோ ஒருவேலைக்குப் போய்விட்டார். இது நிற்க, அந்தக் கல்லோ பிரமாண்டமான ஒரு கல்லாக இருந்தது. அதை ஆறுமனிதர்கள் கூடிப் பகல் முழுவதும் தூக்கினால்தான் அக்கல்லைக் குறித்த இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கலாம். அப்படியிருக்க, அவர் திரும்பிவந்து பார்க்கையில் அந்தப் பாரிய கல்லானது ஒருவரால் அந்த நேரத்திற்குள்ளாய் அவர் சொன்ன இடம்போய்ச் சேர்ந்திருந்தது. அதைக் கண்டு அவர், 'ஆய் மனிதனே! நான் உம்மைப்போல் ஒருவரையும் பார்க்கவில்லை; நீர் மெத்த வல்லமைசாலியாக இருக்கிறீர்' என்று அவர்களைப் புகழ்ந்து பேசினார். அப்பால் அந்த மனிதருக்கு ஏதோ ஒரு ஊருக்கு பயர் போக நேரிடவும், அவர் கிலுறு அலைஹிஸ்ஸலாமிடத்தில் 'ஆய் மனிதனே! நான் உம்மை விசுவாசமுடையவராகப் பெற்றுக்கொண்டேன்; ஆகையால் நீர் என்னுடைய பெண்சாதிபிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளும்' என்று சொல்ல, அவர்கள், 'நல்லது அவ்வாறே பாதுகாத்திருக்கிறேன்; அதனோடு நீர் ஏதாகிலுமெனக்கு ஒரு வேலையையும் கொடுத்துச் செல்லும்; நான் அதைச் செய்து கொண்டிருக்கிறேன்' என்று சொன்னார்கள். அப்போது அவர், 'நான் உமக்கு வேலையைக் கொடுத்து உம்மை வருத்தப்படுத்த நாடவில்லை' என்றார். அதற்கவர்கள், 'அவ்வேலைகள் செய்ய எனக்கு யாதொரு கஷ்

டுமில்லை' என்று சொல்ல, அவர், 'நல்லது நான் போய்வருகிற வரையில் எனது வீட்டைக் கட்டுகிறதற்காகவேண்டி நீர் செங்கல் களை தயார் செய்யும்' என்று சொல்லிவிட்டு சபரில் போய்விட்டார். இதற்கிடையில் அவர்கள் செங்கல்களை தயாரித்து வீட்டையும கட்டி முடித்து விட்டார்கள். அப்பால் அம்மனிதன் சபரை விட்டு வீட்டுக்கு வரவும் வீடு கட்டப்பட்டிருக்கிறதைக் கண்ணுற்று அவர்களிடத்தில் 'ஆய்மனிதனே! நான் உம்மிடத்தில் உண்மையைக் கேட்கிறேன்- நீர்யார்? உம்முடைய நாமமென்ன? எனக்கு விவரமாகச் சொல்லு மென்றார். அப்போது கிழுறு அலைகிஸ்ஸலாம் "ஆய்மனிதனே! நான் கிழுறு; என்னை (லிவஜ்ஹில்லா) என்னும் சொல்லானது அடிமைத்தனத்தில் ஆக்கிற்று. அதாவது நான் ஒருநாள் பனீ இஸ்ராயீல்களுடைய கடைவீதியில் போகும்போது உரிமைச்சீட்டு எழுதிக் கொடுக்கப்பட்ட பகீர் ஒருவன் என்னிடம் வந்து, 'ஏதாவது கொடு' மென்றான் அவனுக்குக் கொடுக்க ஏதுவும் என்னிடம் இல்லாமலிருந்தது. அதனால் நான் 'ஏதுவுமில்லை' யென்றேன்; திரும்பவும் அவன் என்னிடம், '(லிவஜ்ஹில்லா) வெ அனி! அல்லாவுக்காக ஏதுவும் கொடு' மென்றான். ஒருவனிடத்தில் (லிவஜ்ஹில்லா)வைக் கொண்டு சுவால் செய்யப்பட்டால் அவன் கேட்டவனுக்குக் கொடுக்க சக்தி பெற்றிருக்கிறான். அதனால் அவன் கேட்டதைக்கொடுக்காமல் ரத்து செய்வானாகில் அவனுடைய முகத்தில் சதியும்தோலுமில்லாதவனாக கியாமத்து நாளையில் அவனைக்கொண்டுவந்து நிற்பாட்டப்படும்; மேலும் அவன் எலும்புகளும்ஆடிக்கொண்டு இருக்கும்; அதனால் நான் இதற்குட்பட்டேன்', என்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லியதை அம்மனிதர் கேட்டுவிட்டு, 'அல்லாவுடைய நபியே! நான் தங்களை அறியாத்தன்மையால் வாங்கிவிட்டேன்' என்று சொல்ல, 'அதற்கவர்கள், அதனால் யாதொரு பாதகமுமில்லை; நீர் நன்மையான காரியம் செய்தீர்' என்றார்கள். பின்பு அவர், 'அல்லாவுடைய நபியே! என்னுடைய தாய் தந்தையர் தங்களுக்கு குருபானாக இருக்கிறார்கள்; ஆனதால் நான் செய்த குற்றத்துக்குத் தண்டனையாகத் தாங்கள் என்பேரிலும் என்குடும்பத்தார் பேரிலும் எதை ஹுக்கும் செய்கிறீர்களோ அதற்கு நான் உட்படுகிறேன்' என்று சொல்லி மேலும் அவர், 'தாங்கள் எனது கூட்ட குடும்பத்துடன் இருக்கிறீர்களா அல்லது என்னை விட்டுப் போக நாடுகிறீர்களா' என்று கேட்டார். அதற்கு அவர்கள், 'நான் போய் என் நாயனை இபாதத்து செய்ய நாடுகிறேன்' என்று சொல்

லவும். அவர் அவர்களுக்குப் பயணம்போக அனுமதி கொடுத்தார். அவர்கள் போகிறபோது, 'எல்லாப் புகழும் புகழ்ச்சியும் அல்லாஹுத்த ஆலாவுக்கே; அவன் எப்படிப்பட்டவனென்றால் என்னைத் தன்னுடைய வணக்கத்திற்குத் திரும்ப உதவிபுரிந்து அம்மனிதனிடமிருந்து விடுதலை செய்தான். இத்தன்மையான அந்நாயனுக்கே புகழும் துதியும்' என்று சொல்லிக் கொண்டு போய்விட்டார்கள்" என்று நபிநாயகம் அவர்கள் சொன்னார்கள்.

10-வது பஸல். நாயகம் கிழுரு அலைஹிஸ்ஸலாம் உடையஹயாத்தின் திட்டத்தில் பேசம்பிரிவு.

இமாம் நவவி ரஹிமகுல்லா சொல்கிறதாவது: கிழுரு அலைஹிஸ்ஸலாம் ஹயாத்தாக இருக்கிறார்கள் என்பது தான் சஹீஹான சொல்லாக இருக்கும்; அதின்பேரில் மிகுந்த உலமாக்கள், சாலிஹீன்கள், ஸூபியாக்கள் ஒற்றுமையாகி விட்டார்கள். ஆனால் சிலர், அவர்கள் மவுத்தாகிவிட்டார்களென்று சொன்னதை, மிகுந்தவர்கள் ரத்து செய்திருக்கிறார்கள். இன்னும் 'பஸ்லுல் கிதாப்' என்ற கிதாபில் ஷைகு அலாவுத்தவுலா சம்னானி, கத்தஸல்லாகு ஸிர்றகு சொல்லி யிருக்கிறதாவது: யாராகிலு மொருவன் கிழுரு அலைஹிஸ்ஸலாம் ஹயாத்தாக இருக்கிறார்களென்பதை இன்காரு செய்வானாகில் அது அவனுடைய அறியாத்தன்மையாகும் என்பதே. இவ்வாறு அவர்கள் சொல்லி கிழுரு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய நடக்கைகளை விரிவாகவும் எழுதியிருக்கிறார்கள். இன்னும் ஷெய்கு அப்துல் ஹக்கில் முஹத்திஸ் திஹ்லவிய்யி ரஹிமகுல்லா ஷர்ஹு ஸிப்ரிஸ்ஸஆதாத், தக்மீலுல் ஈமான், இவற்றிலும் மற்றதிலும் எழுதி இருக்கிறார்கள்: என்னவெனில், "கிழுரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹஸரத் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமுடைய காலத்திலும், சஹாபாக்கள், தாபிஈன்கள், தரீகாவின் மஷாயிக்கின்கள், காலத்திலும் ஹயாத்தாகவே இருந்து வருகிறார்கள் என்ற விஷயத்தில் அநேக அக்பார்களும் ஆதாருகளும் வந்திருக்கின்றன"

ரிவாயத்து: இப்னு ஷாஹீன் என்கிறவர்கள், ஹனீபு, றகிமகுல்லாவைத்தொட்டு ரிவாயத்து செய்திருக்கிறார்கள்: அதென்னவெனில், "நபிமார்களில் நாலுபேர்கள் ஹயாத்தாக இருக்கிறார்கள்; அவர்களில் இரண்டு பேர்கள் (அதாவது இத்ரீசு அலைஹிஸ்ஸலாமும், ஈசா அலைஹிஸ்ஸலாமும்) வானத்திலும், இரண்டுபேர்கள் (அதாவது: கிழுரு

அலைகிஸ்ஸலாமும், இல்யாசு அலைகிஸ்ஸலாமும்) பூமியிலும்; அதாவது: கிலுரு அலைகிஸ்ஸலாம் கடலிலும், இல்யாசு அலைகிஸ்ஸலாம் கரையிலுமாக இருந்து வருகிறார்கள்'' என்று

ரிவாயத்து: கிலுரு அலைகிஸ்ஸலாமும் இல்யாசு அலைகிஸ்ஸலாமும் அல்லாகுத்தஆலா இடத்தில் ஈராயிரம் வருஷமாக (யாத்திஹா) சூரத்தைப்படிக்கக் கேட்டார்கள். அவன் படித்துக் கொடுக்கவில்லை. பிறகு அவர்கள் மிகவும் கெஞ்சிக் கேட்டார்கள். அப்போது அல்லாகுத்தஆலா, 'நான் அதை முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்லமுடைய உம்மத்திற்காக வைத்திருக்கிறேன்; ஆகிலும் நீங்களிருவரும் (மாவுல் ஹயாத்தென்னும்) தண்ணீரைக் குடித்து எனது ஹபீபாகிய முஹம்மது சல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் வருகிறமட்டிலும் ஹயாத்தாக இருங்கள்' என்று சொன்ஞன். பிறகு அவர்கள் மாவுல் ஹயாத்தென்னும் தண்ணீரைக் குடித்துவிட்டு நபி நாயகம் சல்லல்லாகு அலைகிவஸல்லம் வருமளவும் இருந்து பின்னர் அவர்களிருவரும் நபி நாயகம் இடம் வந்தார்கள். வந்தபோது அவர்கள் அவ்விருவர்களுக்கும் யாத்திஹா சூரத்தைப் படித்துக் கொடுத்தார்கள். அப்போது அவ்விருவர்களும் நபி நாயகம் இடம் 'எங்களுடைய (நிஅமத்து) நிரம்பிவிட்டது; இனி எங்களுக்கு ஹயாத்து வேண்டியதில்லை' என்று சொல்லவும், 'நீங்கள் அப்படிச் செய்யாதீர்கள்; ஹயாத்தாகவே இருந்து என் உம்மத்துகளுக்கு நீங்கள் கடலிலும் கரையிலும் உதவியாக இருங்கள்', என்று நபி நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவஸல்லம் சொன்ஞர்கள். சல்லல்லாகு அலைகிவ அலைகிமா, இன்னும் தப்ஸீரு பக்வியில்,வருகிறது: கிலுரு அலைகிஸ்ஸலாமும், இல்யாசு அலைகிஸ்ஸலாமும் றம்ஸான் மாதத்தில் (பைதுல் முகத்தஸ)வந்து நோம்புபிடித்து நவ்வொரு வருஷமும் ஹஜ்ஜிலும் வந்து சேர்கிறார்கள் றழியல்லாகு அன்குமா.

11-வது பஸல் நாயகம் கிலுரு அலைகிஸ்ஸலாமை ஸஹாபாக்களும் மற்றவர்களும், கண்டதில் பேசும் பிரிவு.

இஸாபா, வென்னும் கிதாபில் ஹாபிலு இபுனுஹஜர் அஸ்கலானி றஹிமஹுல்லா எழுதி இருக்கிறதாவது: என்னவெனில், உமரிபுனு அவுபு,றழியல்லாஹு அன்குவைத்தொட்டு ரிவாயத்து வந்திருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள்: ஒருபோது நாயகம்

நபிகள் சல்லல்லாகு அலைஹிவஸல்லமவர்கள் (மஸ்ஜிதில்) தொழுது
கொண்டிருக்கும்போது மதிலுக்கப்புறமிருந்து திடீரென்று ஒருவர்
கூப்பிட்டு, (அல்லாகும்மா அஇன்னி அஸாமா, யுன்ஜீனி மிம்மா
பஸ்ஸ்ரதனீ) 'ஆ எனது நாயகா! என்னை நீ பயங்கரமாக்கி வைத்ததை
போல் அவைகளைவிட்டு ஈடேற்றம் கொடுப்பதின் பேரில் எனக்கு உதவி
செய்வாயாக' என்று சொன்னார். அவ்வாறு வந்த சப்தத்தை நாய
கம் சல்லல்லாகு அலைஹிவஸல்லம் கேட்டு, அவரை நோக்கி,
'அப்பனிதனே! இந்த துவாவுடன் இணங்கிய இதன் சகோதரியா
யுள்ள வேறு துவாவைச் சேர்த்துச் சொல்லக்கூடாதா' வென்று
சொல்ல, அதைக் கேட்டு அவர் (அல்லாகும்மர்ஸுக்னீ, ஷவ்கஸ்
ஸாலிஹீன், இலாமாஷவ்வகத்தஹும்) 'ஆ எனது நாயனே! நீ என
க்கு உனது சாலிஹீன்களுடைய ஷௌக்கை தருவாயாக; இன்னும் நீ
அவர்களை எக்காரியத்தாலில் ஆசையாக்கி வைத்தாயோ, அதனா
லில் எனக்கும் ஆசையைப் பூட்டுவாயாக' என்று சொல்லி முடிக்க
வும், நபிநாயகமவர்கள், அனசிப்னுமாலிக்கை நோக்கி, 'அனசே!'
நீர் அம்மனிதரிடம்போய் நாயகம் சல்லல்லாகு அலைஹிவஸல்லம்
அவர்களுக்காக நீர் பிழை பொறுக்கத் தேடுவீராம் என்று சொல்லு
மென்றார்கள். அவர் போய்ச் சொல்லவும், அதற்கு அவர் 'அனசே!
நீர் நபிநாயகமவர்களின் தூதரோ? அதின் பேரில் தரிப்பட்டவ
ராகிருக்' என்று சொல்லி, மேலும் 'நீர் நபிசல்லல்லாகு அலைஹி
வஸல்லமவர்களிடம்போய் அல்லா தஆலா தங்களை மற்றும் நபி
மார்களைவிட விசேஷமாக்கி வைத்தான்; எவ்வாறென்றில், றமலான்
மாதத்தை மற்றமாதங்களைவிட விசேஷமாக்கி வைத்ததுபோலாம்.
இன்னும் உங்களின் உம்மத்துகளை மற்றும் நபிமார்களின் உம்
மத்துகளைவிட சங்கையாக்கி வைத்தான். எதுபோலெனில் ஜும்ஆ
உடைய நாளை மற்றநாட்களைவிட சங்கையாக்கி வைத்ததுபோல்
என்று சொன்னதாகச் சொல்லும் என்று சொல்லிமுடித்தார். இன்
னும் அனசு றலியல்லாகு அன்குவைத் தொட்டுவந்த இந்த ஹதீ
ஸை இப்னு அஸாகிர், தபுறானி, இப்னுஷாஹீன், தார்குத்னீ இவர்
களின் ரிவாயத்தில் வந்திருக்கிறது. என்னவெனில், எப்போது
அனசு றலியல்லாகு அன்கு அவர்கள் அம்மனிதரிடம் பேசித்
திரும்பினார்களோ அப்போது அன்னவர் இந்தத் துவாவைச் சொன்
னார்கள். அதாவது: (அல்லாஹும்மஜ் அல்னீ, மின் நாஜிஹில் உம்
மதி) 'நாயனே! நீ என்னை கேள்விபெற்ற இந்த நபியுடைய உம்
மத்தினின்று மாக்கிவிடு' என்று சொன்னதென்பதேயாம். பின்பு

சஹாபாக்கள் மேற்ப்பார்வையில் அவர்கள் கிலுறு அலைஹிஸ்ஸலா மாயிருந்தார்கள்.

ரிவாயத்து : இஸாபாவென்ற கிதாபில், அபூஅம்றுல் நக்மான்சலமி, றஹிமஹுல்லா தங்களுக்குறிய கிதாபில் பிலாலுல்கவாஸ் றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டு எழுதி இருக்கிறதாவது: யாதெனில், அவர்கள் ஒருபோது நான்பனீ இஸ்றாயீலின் காடுகளிருக்கையில் திடீரென்று ஒருமனிதர் வெளியாகி என்னுடன் நடக்க ஆரம்பித்தார். அப்போது நான் ஆச்சரியமுற்றேன். உடனே ஆகாயத்தினின்று தோற்றமின்றி ஒரு சத்தம் இவர்கள் கிலுறு அலைஹிஸ்ஸலாமாயிருக்குமென்று வந்தது. அப்போது நான் அவர்களிடத்தில் அல்லாஹு தஆலாவைக்கொண்டு சத்தியம் செய்து நீங்கள் யாராக இருக்குமென்று கேட்க, அதற்கு அவர்கள் நான் கிலுறென்று சொன்னார்கள். அப்போது நான் அவர்களிடம் இமாம் ஷாபியீ றஹிமஹுல்லாவின் காரியத்தில் என்ன சொல்லுகிறீர்களென்று கேட்டதற்கு அவர் அபுதால்களாகிய அவுலியாக்களினின்றுமாயிருக்கிறாரென்றார்கள். பிறகு இமாம்அஹமதிப்னு ஹம்பலியவர்களில் என்ன சொல்லுகிறீர்களென்று கேட்க அவர் ஸித்தீக்கீன்களினின்று முள்ளவரா யிருக்கிறாரென்றார்கள். பின்பு பிஷ்றுல் ஹாபீ றஹிமஹுல்லாவில் என்ன சொல்லுகிறீர்களென்று கேட்க அவர்களுக்கு ஒருவரும் நிகரானவர்களில்லையென்று சொல்லிமுடித்தார்கள்.

ரிவாயத்து : அபூஜஹ்லமவர்கள் பிஷ்றுல் ஹாபீ றஹிமஹுல்லாவைத் தொட்டு நகல் செய்திருக்கிறதென்னவெனில், அவர்கள் சொல்லுகிறார்கள்: எனக்கு ஒரு அறை இருந்தது. நான் எங்குபோனாலும் அதைப்பூட்டிவிட்டு அதன் திறவுகோலை என்கை வசமாக வைத்துக்கொள்ளுகிறவனாயிருந்தேன். இவ்வாறிருக்கையில் ஒருநாள் நான்வெளியே போய்வந்து கதவைத் திறந்துபார்க்கையில் அதில் ஒருவர் தொழுதவண்ணமாக இருப்பதைக்கண்டு பயந்தேன். இதற்கிடையில் அன்னவர்தொழுது முடித்துவிட்டு என்னை நோக்கி 'அபிஷ்றுல் ஹாபியே! பயப்படாதீர்; நான் உமது சகோதரர் அபுல்அப்பாஸ் கிலுறென்று சொன்னார்கள். அப்போது நான் அவர்களிடம் எதாகிலும் ஒரு துஆவைப் படித்துக்கொடுங்கள் என்று கேட்க இந்த துஆவை ஓதிவாருமென்று சொன்னார்கள். அதாவது (அல்தக்பீருல்லாஹு மின்குல்லிஸைன் மின் துஆயின்

ஹூவ, அப்படைத்து, இலஹி, வஅஸ்அலுகுத்தெளபத) என்பதாம். இதைஓதிவருவதில் அநேக காரியத்து உண்டாயிருக்கிறதென்று சொன்னார்கள்.

ரிவாயத்து: "இபுனு அசாகிர் றகிமகுல்லாகு சொல்லுகிற தென்னவெனில், "இமாம் அபூசர்ஆ, அவர்கள் தங்கள் வாலிபப்பிரா யத்தில் தாடிக்கு மருதோன்றிச்சாயங்கட்டிய ஒரு மனிதரைக்கண் டார்கள். அப்போது அவர்களே அம்மனிதர் நோக்கி, 'நீர் எந்தப் பணக்காரன் வீட்டுவாசலிலும் போகாதே' யென்று சொல்லி விலக்கி விட்டு அக்கணமே மறைந்துவிட்டனர். நான் அம்மனிதனை என் முதிய வயதிலும் அதேகாலத்திலிருக்கக் கண்டேன். அப்போது அன்னவர் என்னை நோக்கி, 'நான் உம்மைப்பணக்காரர் வீட்டுவாசலில் போகவேண்டாமென்று விலக்கவில்லையா?' என்று வினவ, நான் ஆமென்றேன். இவ்வாறு சொல்லித்திருப்புகிறதற்கிடையில் பூமி பிளந்து அவர் அதில் நுழைந்ததுபோலும் என் பார்வையை விட்டு மறைந்துவிட்டார். அப்போதுதான் அன்னவர் கிலுறு அலைஹிஸ்ஸலா மாயிருக்குமென்று எனக்கு தோன்றிற்று. அவர்கள் சொன்னது முதல் நான் எந்தப் பணக்காரன் வீட்டுவாசலிலும்போய் யாதொரு ஹாஜத்தையும் நாடுகிறதில்லை" யென்று சொல்லி முடித்தார்கள்.

ரிவாயத்து: இன்னும், ஜௌஹருல் முஹல்ஸல்பீமாறுக்கி பிஇமாம் அஹமதிப்னுஹம்பல் என்ற கிதாபில் பக்தாதிநிகளில் நின்றுமொரு வரைத் தொட்டும் நகல் செய்யப்பட்டிருக்கிறது. அவர் சொல்லு கிறார்: 'ஒருபோது நான் கப்பலேறி யாத்திரை செய்தவனாக ஒரு தீவுபோய்ச் சேர்ந்தேன். அங்கு தலையும் தாடியும் நரைத்த ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தார். அவருக்கு நான் ஸலாம் சொல்லவும் அவர் மறுமொழி சொல்லி என்னை நோக்கி 'நீர் பக்தாதுக்குப்போ ய்ச்சேர்ந்தால் இமாம் அஹ்மதிப்னுகம்பலிறகிமகுல்லாகுக்கு நமது ஸலாம் சொல்லி, நாம் சொல்லப்போவதை ஓதிக்காட்டும்; அதா வது: "(யஸ்பிர், இன்னைவஃதல்லாகிஅக்குன்) எஃனி! நீர் சபூர் செய்யும் அல்லாகு தாலாவின் உறுதிவாக்கு உண்மை நிர்ணயமில் லாத ஜனங்கள் உம்மை எளிதாய் நினைக்கவேண்டாம்" என்பதே யாகும் என்று ஆயத்தைச்சொல்லி உடனே அவர் பார்வையைவிட்டு மறைந்து விட்டார். அப்போது நாங்கள் 'இவர்கள் கிலுறு அலை ஹிஸ்ஸலாமாக இருக்கலாமென்று அறிந்து கொண்டோம்' என்றார்.

ரிவாயத்து: இமாம் தயூருனிறகிமகுல்லாகிதாபுத்துஆவில் அபூஅப் தில்லாஹிற்தகாவீ என்பவர்களைத்தொட்டு நகல்செய்திருக்கிறதாவது

என்னவெனில், கலிமானிப்னு அப்துல்மலிக் என்னு மாசர் ஒரு மனிதனை வெட்டுகிறதாகப் பயப்படுத்திவிட்டு அப்பால் வெட்டத் தேடும் சமயத்தில், அவன் எங்கேயோ மிரண்டோடி விட்டான். அதன்மேல் அவன் எங்கு போனாலும் அவனைத் தேடிப்பிடிக்க வேண்டுமென்று அவர் பிரயத்தனப்பட்டார். இச்சமாசாரத்தைக் கேள்விப்பட்டு அவன் மிகவும் கவலையுற்றவனாகித் துக்கத்தில் மூழ்கி தன் மனதில், 'நாம் இனிமேல் கலிமானிப்னு அப்துல்மலிக் அரசரின் அதிகாரமில்லாத நாடுகளுக்கே போய்ச்சேர்ந்துவிடவேண்டும்' என்று எண்ணிக்கொண்டு கடைசியில், அம்மனிதன் மரம் மட்டை பூண்டொன்றுமில்லாத மைதான வழியாய் நடந்துபோய் அங்கும் ஒருமனிதர் தொழுதுகொண்டிருந்ததைக்கண்டு பயந்து, 'நம்மிடம் ஏறுவாகனம் கட்டுச்சாதம் முதலிய சாமான் ஏதேனும் இல்லை; அப்படியிருக்க நமக்கென்ன பயம்' என்றெண்ணி அங்குத் தொழுதுகொண்டிருந்தவரிடம் போனான். இதற்கிடையில் அன்னவர் தொழுகையைவிட்டுப் பராக்கொழிந்து அவனை நோக்கி, "ஓ மனிதனே! கலிமானிப்னு அப்துல்மலிக் உன்னை வெட்டுகிறதாகப் பயப்படுத்தினானோ" என்று கேட்க, அதற்கவன் ஆம் என்றான். பிறகு அவர்கள் அவனை நோக்கி, 'நீ இந்த எழுகலிமாவைப் பாடமிட்டுக்கொள்; இது உன்னைக் காப்பாற்றும்' என்று சொல்ல, அதற்கவன் 'அதைப் படித்துக்கொடுங்கள்; அல்லாகுத் தஆலா உங்களுக்கு றகுமத்துச் செய்வான்' என்று சொல்லி முடித்தான். பிறகு அவர்கள் அக்கலிமாக்களை அவனுக்குச் சொல்லிக்கொடுத்தார்கள். அவையாவன: (சுபுகானல் வாஹிதில்லதீ லெய்ஸ கைருஹு இலாஹுன்) (சுபுகானல் கதீமில்லதீ லாபாதிய லஹு) (சுபுகானத் தாயிமில்லதீ லாநபாத லஹு) (சுபுகானல்லதீ குல்ல யவ்மின் ஹுவ பீஷான்) (சுபுகானல்லதீ யுஹ்யீ வயுமீத்து) (சுபுகானல்லதீ கலக மாதரூ வமாலாதரூ) (சுபுகானல்லதீ அல்லம) (குல்லஷெயஇன், பீகைரி தஃலீம்) என்பவைகளாம். இவ்வேழு கலிமாக்களையும் அவன் அவர்களிடம் கேட்டு ஞாபகம் செய்து திரும்பிப்பார்ப்பதற்கிடையில் அவர்களைக் காணவில்லை. பின்பு அவன் 'அல்லாகுத்தாலா எனக்கு அச்சத்திருதலைக் கொடுத்தான்' என்று தன் வீட்டை நாடி வருகையில் அவன் மனதில், 'நாம் கலிமானிப்னு அப்துல்மலிக் வீட்டுவாசலுக்கே நேராய்ப் போகவேண்டும்' என்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. அப்படியே அவன் அங்குப் போகலானான். அந்நாளில் தடையின்றி அவரின் வீட்டுவாயிலில் புகுதுவதற்கு எவருக்கும் உத்திரவு கொடுக்கப்பட்டிருந்தது. அதனால்

அவன் தடையின்றி அவர்முன் போனான். அப்போது அவர் தம் விரிப்பின்மீது படுத்துக்கொண்டிருந்தார். அவனை யவர் கண்டமாத்திரத்தில் கை ஜாடையாகக் கூப்பிட்டுத் தம் விரிப்பின்மீது அவனை நய உட்காரும்படி செய்து, அவனை நோக்கி 'ஆப்மனிதனே! நீ என்பேரில் சூனியம் செய்துவிட்டாயா? அல்லது செய்யத்தான் வந்திருக்கிறாயா? நானோ உன்னை வெட்டவேண்டுமென்ற எண்ணத்துடன் இருந்தும் இப்போது இவ்வாறு நானே உன்னைக் கூப்பிட்டு என் விரிப்பின் பேரில் உட்காரவைக்க நேரிட்டதின் காரணமென்ன? உண்மையாக விவரி' என்று கேட்டார். அந்த மனிதன் போனது வந்தது இடையில் நடந்தது முதலிய சமாசாரங்கள் யாவற்றையும் விவரித்துச் சொன்னான். அவற்றைக்கேட்டு சுலையமானிப்னு அப்துல்மலிக், தமது ராஜதானியிலிருக்கிற ஜனங்களை நோக்கி, "அல்லாகுதஆலாவின்பேரில் சத்தியமாகச் சொல்கிறேன்; இந்த மனிதன் கண்டானே அவர்கள் உண்மையாக கிழுருநபியாக இருப்பார்கள்" என்று சொல்லி, மேலும் அவர்களை நோக்கி, "நீங்கள் இம்மனிதனுக்கு சார்மானத்தின்சிட்டுக்கொடுத்து நமது தர்பாரினின்று வெகு,வெகு மதிகளையும் கொடுத்தனுப்புங்கள்" என்று கட்டளையிட்டார். அவ்வாறே அம்மனிதன் கொடுத்தனுப்பப்பட்டான்.

12-வது பசல்: நாயகம் கிழுரு அலைகிஸ்ஸலாம் அவர்கள் அவுலியாக்களுடன் சந்தித்ததில் பேசும் பிரிவு.

ஹிகாயத்து—1: தஸ்கிறதுல் அவ்லியாவில் சுல்தான் ஹலறத்து இபுறாஹீம் முப்னு அத்கம் றலியல்லாகு அன்குவின் நடப்பைப் பற்றி எழுதியிருக்கிறார்கள்: ஒருநாள் அவர்கள் தர்பாரில் ராஜாங்கத்திற்கு அதிகாரமுடையவர்கள் எல்லாம் வந்து நிற்கும்போது திடீரென்று ஒரு மனிதர், தர்பாருக்கு நேராக சிம்மாதனத்துக்கருகில் வந்து நின்றார். அப்போது ஒருவராலும் அவரை வருகிறதைவிட்டுத் தடுக்க முடிந்ததில்லை. அப்போது இபுறாகிமுப்னு அத்கம் றலியல்லாகு அன்கு அவர்கள் அவரை நோக்கி, 'ஆப் மனிதனே! நீர் இங்கு எதை நாடி வந்தீர்?' என்று கேட்கவும், அவர் 'இந்த சத்திரத்தில் தங்கலாமென்று வந்தேன்' என்றார். அப்போது அவர்கள் அவரை நோக்கி, 'இது சத்திரமில்லை; என்னுடைய வீடாக இருக்கும்' என்று சொல்ல, அவர் அவர்களிடம் 'இதற்கு முன்னால் இது யாருடைய வீடு' என்று கேட்க, அவர்கள் என் தகப்பனார்

வீடென்றார்கள். அதற்கவர், அதற்கு முன்னால் அது யார்வீடென்று கேட்க அவர்கள் என் பாட்டனார் வீடென்றார்கள். அப்போது அவர், அவர்களெல்லாம் எங்கே போனார்கள் என்று கேட்டார். அதற்கவர்கள் மவுத்தாகி விட்டார்கள் என்று சொல்லவும் அவர் அப்படியானால் இது சத்திரமாச்சுது; ஏனெனில் இதில் ஒருவன் வருகிறான் மற்றொருவன் போகிறான் என்று சொல்லிவிட்டு வெளியில் போய்விட்டார். அப்போது இபுறாகீமுப்னு அத்கம் றலியல்லாகு அன்கு அவரைப் பின்தொடர்ந்துபோய், அவரிடத்தில் நீர் யார்? எனது அகத்தில் ஆசையென்னும் நெருப்பை மூட்டிவிட்டீரே என்று சொல்லவும், அவர்கள் நான் கிலுறாயிருக்குமென்று சொன்னார்கள். இன்னுமொரு ரிவாயத்தில் வருகிறது: இபுறாகீமுப்னு அத்கம் றலியல்லாகு அன்கு அவர்களைத் தொடர்ந்து முத்தவழியில் போகிறபோது பெரிய மனிதர் ஒருவர்வந்து அவர்களுக்கு (இஸ்முல் அஃலமை) படித்துக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். பிறகு அவர்கள் அதைக்கொண்டு அல்லாகுதஆலாவினிடத்தில் வஸீலா தேடினவர்களாயிருக்கையில் திரும்பவும் அவர்கள் கிலுறு அலைகிஸ்ஸலாமை கண்டார்கள். அப்போது அவர்கள் சொன்னதாவது: ஆப் இபுறாகீமே! உமக்கு இஸ்முல் அஃலமை படித்துத்தந்தது என்சகோதரர் இல்யாஸ் அலைகிஸ்ஸலாமாக இருக்குமென்று சொன்னார்கள். இருவர்களுக்கிடையில் மிகுந்த பேச்சுகள் நடந்துகொண்டிருந்தன. மேலும் அவர்களுக்கு ஷெய்கு, கிலுறு அலைகிஸ்ஸலாமாக இருக்கும். அவர்கள் தான்சுல்தானே ராஜாங்கத்தைவிட்டு ஒழிக்கக் காரணமாகவிருந்து அல்லாகு தஆலாவுடைய பாதையில் வேட்கையாக்கி வைத்தார்கள்.

ஹிக்காயத்து-2.

தஸ்கிறதுல் அவுலியாவில் வருகிறது: ஒரு மனிதன் ஹஸ்றத்து நாயகம் அபாயஸீதுல் புஸ்தாமி றலியல்லாகு அன்கு சமூகத்தில் வந்து சொன்னான்: நான் தக்கலா தபுறஸ்தான் என்னும் ஊரில் இன்ன மனிதருடைய ஜனாஸாதொழுகையில் பார்த்தேன். தாங்கள் கிலுறு அலைகிஸ்ஸலாமுடைய கையைப்பிடித்துக்கொண்டிருந்தீர்கள். தொழுகை முடிந்தவுடன் ஆகாயத்தில் பறந்துவிட்டீர்களென்று சொல்லவும், அவர்கள் நீர் உண்மையைச் சொன்னீர் என்று சொன்னார்கள். றலியல்லாகு அன்கு.

ஹிக்காயத்து-3.

அஹ்மது ஹவாரி றகுமத்தல்லாகு விர்றகு சொல்லுகிறார்கள்: இபுனு ஸம்மாக் றஹிமகுல்லாவுக்கு ஸவுக்கியமில்லாமலிருக்கிற போது நான் அவர்களுடைய நீரை எடுத்துக்கொண்டு யஹூதியாகிய பரிகாரனிடத்தில் போனேன். போகையில் இடைவழியில் நூறானியத்துடைய ஒரு வாலிபனைக்கண்டேன். அவர் அழகியதாய்த் தான உடையை அணிந்திருந்தார். அவரில் நின்று பரிமளவாசனைகள் கமழ்ந்தன. அவர் என்னைப்பார்த்து நீர் எங்கேபோகிறீரென்று கேட்டார். நான் இபுனு ஸம்மாக் றஹிமகுல்லாவுடைய காரூராவை எடுத்துக்கொண்டு வைத்தியனிடத்தில் போகிறேனென்று சொல்லவும், அவர் சொன்னார்: (ஸுப்ஹானல்லா) ஆச்சரியம்! என்னவெனில் அல்லாகுதஆலாவின் தோழர்களுக்காக வேண்டி அவனுடைய பகைஞனவனின் நின்று உதவியை நாடுகிறீர்களோ? திரும்பிப் போய் அவர்களுக்குச் சொல்லும். எங்கு வருத்தமாக இருக்கின்றதோ அங்கு கையை வைத்து "(அஊதுபில்லாஹிமினஷ் ஷயதானிர்றஜீம் வபில் ஹக்கினஅன்ஸல்னாகு வபில்ஹக்கினஸல்)" என்ற ஆயத்தை ஓதவும் என்று சொன்னார்கள். பின்னர் நான் திரும்பிவந்து இபுனு ஸம்மாக் றஹிமகுல்லாகு அவர்களிடத்தில் நடந்த சமாசாரத்தைச் சொல்லவும் அவர்கள் அப்படியே செய்ய அதேவத்தில் அவர்களுக்கு ஸவுக்கியமும் ஆரோக்கியமும் உண்டாயின. பிறகு இபுனுஸம்மாக் றஹிமகுல்லாகு அவர்கள் என்னிடத்தில் நீர் அம்மனிதரை அறிவீரா என்று கேட்டதற்கு நான் அறியேனென்று சொன்னேன். அவர்கள் கிழுரு அலைஹிஸ்ஸலாமாக இருக்குமென்று சொன்னார்கள். ரலியல்லாகு அன்கு.

ஹிக்காயத்து-4.

ஹகீம் திர்மதி என்கிறவர்கள் ஒருநாள் தாங்கள் கோர்வை செய்த கிதாபுகளெல்லாம் தண்ணீரில் கொண்டுவந்து போட்டிடவும் கிழுரு அலைஹிஸ்ஸலாம்வந்து அவைகளை எடுத்துக்கொண்டுவந்து அவர்கள்வசம் ஒப்பித்துவிட்டு அவர்கள் சொன்னதாவது: நீர் கிதாபு கோர்வைசெய்வதின்பேரிலேயே பாரக்காக இருமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். பின்பு அவர்கள் சிலகாலம்வரையில் கிழுரு அலைஹிஸ்ஸலாமைப் பாராதவர்களாயிருந்தார்கள். அப்படி இருக்கும்காலத்தில் ஏதோ ஒரு வெள்ளாட்டி ஒரு பையனுடைய நஜீஸா

வட்டிலையைத் தனைத்துக்கொண்டிருந்தனர். அங்கு கஜீஸா
ராப்பிய தண்ணீரும் பாத்திரமும் ஒரு படிக்கத்திலிருந்தது. கிலுரு
அலைகிஸ்ஸலாம் வெண்மையான ஆடையை அணிந்தவர்களாக அந்த
திசையாய் வந்தபோது •அவ்வெள்ளாட்டியானவள் மேகபத்தில்
அந்த கஜீஸான படிக்கத்திலுள்ள தண்ணீரை அவர்கள்மேரில் ஊற்
றிவிட்டாள். அவர்கள் அதின்மேரில் சபூர்செய்துகொண்டு அதே
வக்தில் ஹாகிம் திர்மதீ றஹிமஹுல்லாகுவிடம் வந்து அவர்களுக்கு
இடையில் நடந்த சமாசாரங்களைத் தெரியப்படுத்திவிட்டுப் போனார்
கள். ரலியல்லாகு அன்கு.

ஹிக்காயத்து-5.

அஸ்றாருல்பாத்திகா என்ற கிதாபில் வருகிறது: கிலுரு அலைகிஸ்
ஸலாம் சொல்லுகிறார்கள்: நான் ஒருநாள் மன்சூரிப்னு அம்மார் றலி
யல்லாகு அன்குவின் மஜ்லிஸுக்குப்போயிருந்தேன். அதிலொரு
வாலிபர் மையத்தாக விழுந்து கிடந்தார். அப்போது நான் அங்கி
ருப்பவர்களிடம் அவரைக் குறித்துக்கேட்டேன். அவர்கள் சொன்
னதாவது: ஒரு மனிதன் இந்த மஜ்லிஸில்(அல்லாகு அல்லா) என்று
ஒரு சத்தம்போட்டார். இம்மேன்மையாகிய திருநாமத்தைக் கேட்ட
வுடன் அவருடைய றூகு போயிற்று என்று சொன்னார்கள்: பின்னர்
கிலுரு அலைகிஸ்ஸலாம் சொல்லுகிறார்கள்: நான் இரவில் நித்திரை
செய்யும்போது அவ்வாலிபரைக் கனவில் தரிசித்து அவருடைய
ஹாலைக்குறித்துக் கேட்டபோது அவர் சொன்னதாவது, அல்லாகுத
ஆலா எனக்கு ஷஹீதுடைய தர்ஜாவைவிட மேலான தர்ஜாவைக்
கொடுத்தான் என்று சொன்னார். அப்போது அதின்காரணம் என்ன
வென்று கேட்க அதற்கவர் ஷஹீதுகள் குபாருகளுடைய வாளைக்
கொண்டு வெட்டப்பட்டிருக்கிறார்கள். நானோ ஜப்பாராகிய அல்லா
குத்த ஆலாவுடைய வாளைக்கொண்டு வெட்டப்பட்டேன் என்று
சொன்னார் என்பதாய்ச் சொன்னார்கள். றலியல்லாகு அன்கு.

ஹிக்காயத்து-6.

இன்னும் அதில் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது: கிலுரு
அலைகிஸ்ஸலாம் அவர்கள் சொல்லுகிறார்கள்: நான் ஒரு மைதானத்
தில் போகும்போது அங்கு கருப்பாகிய ஒரு மனிதன் விழுந்துகிட
ந்துகொண்டு பலதடவையாக(அல்லாகு அல்லாகு) வென்றுசொல்லி

ஹாஷிர் இழந்தவராய் ஆகிவிட்டார். எப்போது அவருக்கு ஹாஷிர் நீங்கினதோ அப்போது அவருடைய நிறம் மாறி வெண்மை வந்து விடுகிறது. தெளிவுபெற்றாரானால் வழக்கப்படியேகருப்பாகி விடுகிறார். அப்படியே அவரின் நிறம் மாறிக்கொண்டே வருகிறது. அப்போது நான் அவரிடத்தில் ஆப் பகீரே! உமதின் ஹாலென்னவென்று கேட்டேன். அப்போது அவர் புன்சிரிப்பு சிரித்தவராய் என்னைநோக்கி ஆய்கினரே நீர் அறியமாட்டீரா? அவனுடைய திருநாமத்துடன் கருப்பு நிறங்காநிகின்று உமக்குத் தெரியாதாவென்று சொன்னார் என்று (ரலியல்லாகு அன்கு)

ஹிக்காயத்து-7.

இபுறாகீமுல் கவ்வாஸ் றளியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள்: நான் என்னுடைய யாத்திரைகளில் சிலவற்றில் காட்டில் எனக்குத் தாகம் உண்டாகி தாகத்தின் கொரோத்தால் மயங்கிக் கீழேவிழுந்தேன். அப்போது ஒருவரால் தண்ணீர் கொண்டுவந்து என் முகத்தில் தெளிக்கப்பட்டது. நான் விழித்துப்பார்க்கையில் முகம் அழகான ஒரு மனிதர் வாகனத்தில் இருந்து எனக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு என்னை தமக்குப்பின்னால் ஏறி உட்காரும்படி சொன்னார். அப்போது நான் அதில் ஏறிக்கொஞ்சதூரம் போவதற்குள் அவர் என்னைப்பார்த்து 'இப்போது எதைநீர் பார்க்கிறீர்' என்றார். நான் 'மதீனாவைப் பார்க்கிறேன்' என்றேன். அப்போது அவர், என்னை நோக்கி, 'நீர் கீழேயிறங்கிப்போய் றசூல் சல்லல்லாகு அலைஹிவஸலாமுக்கு சலாம்சொல்லி விட்டு, உங்களுடைய உடன்பிறந்தார் கிலுரு தங்களுக்குச் சலாம்சொன்னாரென்று சொல்லும்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்: (றளியல்லாகு அன்குமா)

ஹிக்காயத்து-8.

கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தொட்டும்பேசப்படுகிறது: அவர்களிடத்தில் நீங்கள் உங்கள் ஹயாத்தில்கண்ட கருமத்தில் மெத்த ஆச்சரியமானதைத் தொட்டும் சொல்லுங்கள் என்று கேட்டதற்குஅவர்கள்சொன்னார்கள்: நான்கண்டதில்மெத்தப்புதுமையானதாகிறது, ஒருபோது நான் பரிய வனாந்தரக்காட்டில் நடந்துபோனேன்; அதின்பிறகு நான் அந்தக்காட்டைவிட்டு ஐந்நூறு வருடக்காலம் மறைந்திருந்தேன். பிறகு அந்தக் காட்டுக்கு மறுபடியும் போனேன். அந்தக்காடு பிரமாண்டமான பட்டணமாகி அதில்

அநேக ஆலா விருக்ஷங்களும், ஆறுகளும் உண்டாயிருந்தன. அப்போது நான் அந்த ஊரில் கண்டவர்களில் ஒருவரிடத்தில் இந்தப் பட்டணமுண்டாகி எவ்வளவுகாலம் இருக்குமென்று கேட்டேன்; அப்போது அவர் சொன்னதாவது: (சுபுஹானல்லா) நாங்களும் எங்கள் தகப்பனர் பாட்டனர்களும் இப்பட்டணத்தை இந்நிலத்திலேயே அறிந்திருக்கிறோமென்றார். அப்பால் நான் அப்பட்டணத்தைவிட்டும் ஐந்நூறு வருடகாலம் மறைந்து இருந்துவிட்டுப் பிறகு அப்பட்டணத்திற்குப் போனேன். அப்போது அது கடலாகவிருந்தது. அதில் ஒரு ஓடக்காரனைக் கண்டு நான் அவனிடத்தில் ஆப் மனிதனே! இவ்விடத்தில் உண்டாயிருந்த பட்டணம் எங்கேயென்று கேட்டேன். அதற்கு அவன் (சுபுஹானல்லா) இவ்விடத்தில் பட்டணம் உண்டாயிருந்ததாக நான் கேள்விப்படவில்லை. எங்கள் தகப்பன்மாரும் பாட்டன்மாருங்கூட கேள்விப்பட்டதாகச் சொல்லவுமில்லை என்று சொன்னான். அப்பால் நான் அந்தக் கடலைவிட்டு ஐந்நூறு வருடம் மறைந்திருந்துவிட்டு மீண்டும் அங்கே போனேன். அப்போது அது பழையபடி பாரிபட்டணமாக இருந்ததென்று சொன்னார்கள். (சுபுஹானல்லா)

ஹிக்காயத்து-9.

ஸாலிஹீன்களில் நின்று ஒருவரைத்தொட்டுப்பேசி வரப்படுகிறது: அவர்கள் சொன்னார்கள்: நான் ஹிஜாஸ் தேசத்துக் காட்டில் சிறிதுநாளாக யாதொன்றும் புசிக்காமல் சுற்றித்திரிந்தேன். அப்படி இருக்கையில் ஒருபோது எனக்கு ரொட்டியின்பேரிலும், சுட்டசுடவிருக்கும் மொச்சைக்கொட்டையின்பேரிலும் இச்சையுண்டாயிற்று. அப்போது 'இப்போது நாம் காட்டிலிருக்கிறோம்; நமக்கும் இராக்கு தேசத்திற்கும் இடையில் வெகுதூரமிருக்கிறதே' என்று நான் நினைத்தேன். அவ்வாறு நினைத்து முடிவதற்குள் தூரத்திலிருந்து ஒருநாட்டு அறபி 'மொச்சைக்கொட்டை ரொட்டி' யென்று சத்தமிட்டுக் கூறினார். அப்போது நான் அவரிடம்போய் உம்மிடத்தில் மொச்சைக்கொட்டை இருக்கிறதாவென்று கேட்டேன். அதற்கு அவர் ஆமென்று சொல்லி அவரின் ஆடையைவிரித்தார். அதில் மொச்சைக்கொட்டையும் ரொட்டியுமிருந்தன. அப்போது அவர் என்னைப்பார்த்து தின்னுமென்றார். நான் அதைத்தின்றேன். மூன்றுவது தடவையும் மறுபடியும் தின்னுமென்றார்; தின்றேன். நாலாவது தடவை நான் அவரைப்பார்த் தின்னுமென்றார்; தின்றேன்;

ஸ்ஸலாமிடம் இவர் முர்ஸலான நபியா அல்லது முகர்றபான மலக்காவென்று கேட்டேன். அப்போது அவர்கள் சொன்னார்கள்: இவர் முர்ஸலான நபியுமல்ல, முகர்றபான மலக்குமல்ல; என்கிலும் இவர் உம்முடைய உம்மத்துகளில் இன்றும் எப்போதும் நாவு அல்லாஹ்வுடைய திக்ரைக்கொண்டு சதாமாக இருந்த ஒருமனிதன் என்றார்கள்.

ஹிக்காயத்து-11.

இபுனுஷ்ஷஜரி என்கிறவர்கள் சர்க்காவியில் இருந்துகொண்டு நல்லமக்களின் ஹுறமைபீஷானின் என்று ஆயத்திற்கு அறு சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவர்கள் தலைக்குமேல் ஒருவர் நின்றுகொண்டு அவர்களை நோக்கி இப்போது உம்முடைய நாயன் என்னசெய்கிறான் என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஜவாபு சொல்லமுடியாமல் சஞ்சலமுள்ளவர்களாயிருந்தார்கள். அப்படி இருக்கும்போது அன்றிரவில் றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களைக் கனவில் அவர் தரிசித்து அவர்களிடத்தில் இச்சமாசாரத்தைக் குறித்துச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் சொன்னதாவது: உம்மிடம் வந்து சவால் கேட்டவர்கள் கிலுறு அலைஹிஸ்ஸலாம். இன்னுமவர்கள் உம்மிடம் வருவார்கள்; வந்தால் நீர் அவர்களுக்கு இவ்வாறு ஜவாபு சொல்லும்: அல்லாஹுத்தஆலா ஆதியில் குயமிருந்த இல்மின்படிக்குச் எல்லாக்காரியாதிகளையும் நடத்திவருகிறானே அல்லாமல் அவன் புதிதாக வேறொன்றையும் அமைக்கவில்லை; ஆனால் அவனிப்போது சில ஜனங்களை உயர்த்துகிறான்; சிலர்களைத் தாழ்த்துகிறான் என்று சொல்லுமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். மறுநாள் கிலுறு அலைஹிஸ்ஸலாம், அவர்களிடம் வந்து அக்கேள்வியை கேட்கவும், உடனே அவர்கள் றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லம் சொன்ன ஜவாபை சொன்னார்கள். கிலுறு அவர்கள் அவர்களை நோக்கி யார் உமக்கு இந்தஜவாபை படித்துக்கொடுத்தார்களோ அவர்கள் மேல் நீர் சலவாத்து சொல்லுமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். (ரலியல்லாகுஅன்கு)

ஹிக்காயத்து-12.

ஷாய்கும் அபுதுல் காதிறுல் ஜீலானீ சொன்னார்கள்: நான் யாத்திரை செய்யும் காலத்தில் ஒருமனிதர் என்னிடத்தில் வந்தார். அவரை அதற்குமுன் நான் கண்டதில்லை. அவர் எனக்குச் சொன்னதாவது: உமக்கு என் சிநேகிதம் வேண்டுமாவென்றார். ஆம் வேண்டுமென்று சொன்னேன். அவ்வாறு வேண்டுமாகில் நீர் என் சொற்றுக்கு

திரிலும் விகற்பம் செய்யக்கூடாதென்றார். அவ்வாறே நான் ஒப்புக் கொண்டேன். பின்பு அவர் என்னை நோக்கி நான் வருகிறவரையில் நீர் இந்த விடத்திலேயே இருமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். நான் ஒருவருடம் வரையில் அதே இடத்திலேயே இருந்தேன். பிறகு அவர் வந்து ஒருசாஅத்து நேரம் என்னுடன் உட்கார்ந்திருந்து எழுந்துபோகையில் என்னை நோக்கி நான் வருகிறமட்டும் இந்தத்தலத்திலேயே இரும்; வேறிடம் போகக்கூடாதென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். பின்பு அவர் ஒருவருடம்வரையில் என்னைவிட்டுப் பிரிந்திருந்து, ஒரு சமயத்தில் ரொட்டியும் பாலும் கொண்டுவந்து வைத்துக்கொண்டு என்னை நோக்கி, நான்கிலுரு; உம்முடனிருந்து தின்னும்படி எனக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லவும், நாங்கள் இருவரும் ஒன்றாய்க் கூடியிருந்து அவற்றைத் தின்றோம். அப்பால் அவர்கள், என்னை நோக்கி நீர் நம்முடன் பகுதாதுக்குப் பிரயாணப்படும் என்றார்கள். நான் அவர்களுடன் பகுதாதுக்கு வந்தேன் என்றார்கள். (ரலியல்லாஅன்கு)

ஹிக்காயத்து-13.

ஷைப்ரு அபிஸானதில் ஹாரிதிறலியல்லாகுவைத் தொட்டு ரிவாயத்து வந்திருக்கிறது: நாயகம் முகியித்தீன் அப்துல்காதிறு ஜீலானிறலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள்: "நான் இராக்கு ராஜ்யத்தின் காட்டில் இருபத்தைந்துவருடம் யாத்திரை செய்துகொண்டிருந்தேன். அப்போது நான் ஜனங்களையும் ஜனங்கள் என்னையும் அறிந்ததில்லை. ஆகிலும் ரிஜாலுல் கைபெனும் அவுலியாக்கள் என்னிடம் வந்துகொண்டிருப்பார்கள், அவர்களுக்கு நான் அல்லாகுத்தாலாவுடைய மேன்மையான மஃரிபாவென்னும் இல்முகளைக் கற்பித்துக்கொடுக்கிறவனாக இருந்தேன். எப்போது நான் இராக்குக்கு ஆரம்பமாக வந்தேனோ அப்போது என்னிடம் கிலுரு அலைகிஸ்ஸலாம் வந்தார்கள். அதுவரையிலும் நான் அவர்களை கிலுரு என்று அறிந்ததில்லை. பிறகு அவர்கள் என்னை நோக்கி, நான் உம்மை எந்த தலத்தில் உட்காரும்படி சொல்லுகின்றேனோ அங்குதான் நீர் இருக்க வேண்டுமென்று என்னிடத்தில் ஷர்த்து வாங்கி ஒரு இடத்தில் இருக்கும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். நான் அதே இடத்தில் மூன்றுவருடம் இருந்தேன். அப்படி இருக்கையில் அவர்கள் ஒவ்வொருவருஷத்தில் என்னிடம்வந்து இன்னின்னவிடத்தில் உட்காருமென்று சொல்லிவிட்டுப் போகிறவர்களாக இருந்தார்கள். (ரலியல்லாகு அன்கு)

ஹிக்காயத்து-14.

ஷெய்கு அபூ முகம்மதக்காலி மூப்னி உபைதுல்பஸரிய்யி றஹிமஹுல்லாவிடத்தில் ஒரு மனிதன் வந்து கிலுறு அலைஹிஸ்ஸலாம் ஹயாத்தாயிருக்கிறார்களா அல்லது மௌத்தாகி விட்டார்களாவென்று கேட்டபோது ஷெய்கு அவர்கள் சொன்னார்கள்: கிலுறு அலைஹிஸ்ஸலாம் ஹயாத்தாகத்தான் இருக்கிறார்கள்; நான் அவர்களிடம் முஸாபகத்து செய்துவிட்டு அவர்களிடத்தில் உங்களுக்கும் அவுலியாக்களுக்கு மிடையில் ஆச்சரியமான சமாச்சாரம் ஏதும்நடந்திருக்கிறதாவென்று கேட்டேன். அப்போது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 'நான் (பஹ்றுல்முஹீத்து) என்னும் சமுத்திரக்கரையோரம் போயிருந்தேன். அங்கு மனிதர்களாலும் ஜின்களாலும் போகமுடியாது. இருக்க, அங்கொருமனிதர்கம்பளியைப் போட்டு மூடிக்கொண்டவராக நித்திரை செய்துகொண்டிருந்தார். அப்போது நான் அவரை இவர் அல்லாகுத்தஆலாவின் ஒலியாயிருக்குமென்று எண்ணி அவரையென்பாதத்தைக்கொண்டு தட்டி எழுப்பினேன். பிறகு அவர் விழித்து தாம் மூடியிருந்த கம்பளியைத் தலையைவிட்டு நீக்கி, என்னைநோக்கி 'ஆ மனிதனே! என்னில் நின்றும் நீர் எதை நாடுகிறீர்' என்றார். அப்போது நான் அவருக்குச் சொன்னதென்னவெனில், நீர் தூக்கத்தை விட்டு அல்லாகுத்தஆலாவை இபாதத்துசெய்கிறதை நாடினேனென்றேன். அதற்கு அவர் நீர் என்னைவிட்டும் தூரப்போய் உமதுபாபுசைக்கொண்டு பருக்காகுமென்று சொல்ல, நான் அவரைநோக்கி நீர் எழுந்திராமல் போனால் ஜனங்களிடத்தில்போய் இவர் அல்லாகுத்தஆலாவுடைய ஒலியாக இருக்குமென்று சொல்லிவிடுவேன் என்று சொல்லவும், அதற்கவர் நீரும் இவ்விடம் விட்டுப்போகவில்லையானால் நானும் ஜனங்களிடம்போய் இவர் கிலுரு என்று உம்மைக் காண்பித்துக்கொடுத்து விடுவேன் என்று சொன்னார். பின்னர் நான் அவரிடத்தில் நீர் என்னை எவ்வாறு அறிந்தீர் என்று கேட்டபோது அவர் என்னைநோக்கி, உண்மையாக நீர் அபுல் அப்பாஸ் கிலுறு என்று நான் அறிந்திருக்கிறேன். நான் யாரென்று சொல்லுமென்றார். அப்போது நான் அல்லாகுத்தஆலாவிடத்தில் முனாஜாத்து செய்து, 'நாயனே! நான் அவுலியாக்களுக்கெல்லாம் தலைவனாக இருக்க, இந்த மனிதருடைய சமாச்சாரம் ஏதென்றும் எனக்குத் தெரியவில்லையே' யென்று சொன்னபோது, தொத்திர

மன்றி ஒரு சப்தம் வந்தது; அதாவது: 'ஆய் அபுல்அப்பாஸே! நீர் அவ்வாறும் தலைவர்தான். இவரும் நமது ஹபீபுகளில் சார்ந்தவர். நாம் அவரை முஹப்பத் வைத்திருக்கிறோம்' என்பதே. இந்த சத்தம் வரவும் அவர் என்னைப்பார்த்து 'ஆய் அபுல் அப்பாஸே! நீர் அவ்வருத்தாளரிடத்தில் நமது கடாக்ஷத்தைக் கேட்டீரோ' வென்று கேட்க, நான் ஆமென்று சொன்னேன். பின்பு நான் அவரில் நின்று துஆசெய்வதை நாடினேன். அவர் என்னில் நின்று துஆ செய்வதை நாடினார். அப்போது நான் அவரைநோக்கி, நீர்தான் எனக்காக வேண்டி துவாசெய்வது அகத்தியமாக இருக்குமென்று சொல்ல, அவர் என்னைநோக்கி நீர்போம்; அல்லாகுத்தாலா உம்முடைய நன்மை நிரப்பமாக்கி வைப்பானென்றார். நான் அவரில் நின்று மறைவும் அதிசயமாகிய துவாவை நாடவும் அப்போது அவர் என்னிடத்தில் மறைவாகிவிட்டார். பிறகு நான் அவ்விடத்தில் நின்று கொஞ்சதூரம் போகவும் அங்கு பிரமாண்டமான மணல்மேடு ஒன்று தோன்றியது. அது வானத்தை முட்டினது போலிருந்தது. அதில் ஏறிப்பார்க்கலாமென்று எனது மனது நாடியது. அப்பால் நான் அதில் ஏறி நடந்துபோகவும் அங்கு ஒளியொன்று பிரகாசிக்கிறதைக் கண்டேன். அவ்வொளியைக் கண்ணுற்றுப் பார்க்கக்கூடவில்லை. அப்பால் நான் அந்த ஒளி எவ்விடத்தில் நின்று தான் வருகிறது என்று தெண்டித்து கூர்க்கப்பார்க்கையில் அங்கு திடீரென்று ஒரு பெண்பிள்ளை கம்பளியைக் கொண்டு போர்த்தினவளாய் நித்திரை செய்தாள். அவளுடைய கம்பளியைப் பார்த்தால் நான் முன்கண்ட மனிதருடைய கம்பளிக்கு ஒற்றுமையாய் இருந்தது. பின்பு நான் அப்பெண்பிள்ளையை எழுப்பலாமென்று இருக்கையில் தோத்திரமன்றி ஒரு சப்தம் வந்தது; அதாவது: 'ஆய் கிலுரே! அதபு செய்யும். ஏனெனில் நாம் அவளை முஹப்பத் வைத்திருக்கிறோம்' என்பதே. இந்த சத்தம்வரவும் நான் அவள் விழிப்பதை எதிர்பார்த்திருந்தேன். அவள் தஹுதொழுகையின் துவக்கத்தில் விழித்தாள் அப்படி விழித்தபோது 'எல்லாப்புகழும் புகழ்ச்சியும் ஒரு நாயனுக்கே; அவன் என்னைச் சிறியவுத்துக்குப்பின்னும் சிறப்பாக்கிவைத்து தன்னளவில் என்னுடைய கல்பை ஆசையாக்கி வைத்தான். இன்னும் எல்லாத் துதியும் அவனுக்கே. அவன் என்னை தன்னோடு மருகுதலைக்கிவைத்து அவனின் அடியார்களை என்னைவிட்டு விலக்கியாக்கிவைத்தானே அங்

நாயனுக்கே புகழும் துதியும் என்று சொல்லிவிட்டு என்னை நோக்கி, (மர்ஹபன்பிகயா அபல் அப்பாஸ்) என்னே அபுல் அப்பாஸே! உமக்கே சுபசோபனம்; ஆனால் நீர் விலக்கப்படு முன்பதாகவே அதபாக இருந்திரானால் மெத்த நல்லதாக இருந்திருக்கும் என்றாள். நான் அவளிடத்தில் அல்லாகு தஆலாவைக்கொண்டு சத்தியஞ்செய்து நான் முன்கண்ட மனிதருடைய மகிமையல்லவாவெனக் கேட்க, அவள் ஆமென்று சொல்லிவிட்டு என்னைநோக்கி இந்தக் காட்டில் அப்தாலுகளில் நின்றுமுள்ள ஒருபெண்பிள்ளை வபாத்தானாள். அவளைக் குளிப்பாட்டி கபன் முதலானவை செய்கிறதற்காகவேண்டி அல்லாகுதஆலா இங்கு என்னை அனுப்பினான். அப்போது நான் அவளைக் குளிப்பாட்டி கபனிட்டு பாரக்கொழித்தேன். அப்போது அவளின் மய்யித்தை எனக்கு முன்பாகவேவானத்தளவில் உயர்த்தப்பட்டுக் கொண்டுபோகவும் அது என் பார்வையைவிட்டு மறைவாகிவிட்டதென்று சொல்லிமுடித்தாள். பிறகு நான் அவளின்னின்று துவாசெய்வதை நாடவும் அவள் என்னில் நின்றும் துவாவை நாடினாள். அப்போதுநான் அவளிடத்தில் நீதான் எனக்காகவேண்டி துவாசெய்வது முக்கியமாக இருக்குமென்றேன். அதற்கு அவள் அல்லாகு தஆலா உமதின் நசீபை நிரப்பமாக்கி வைப்பான் என்று சொன்னாள். பிறகு நான் அவளிடத்தில் நின்று அதிகமான துவாவை நாடினேன். அப்போது அவள் என்னை நோக்கி, நீர் என்னைச் சடைவாக்காதீர்; அவ்வாறு சடைவாக்குவீராகில் நான் உம்மைவிட்டு மறைவாகிவிடுவேன் என்று சொல்லிவிட்டு மறைவாகி விட்டாள்." என்று சொன்னார்கள். பின்னும் ஷெய்கு அபூமுகம்மது றஹிமகுல்லாஹு சொல்லுகிறதாவது: நான் கிலுரு அலைஹிஸ்ஸலாமிடத்தில் இந்த அவ்லியாக்கள் கூட்டத்தில் யாதொரு பர்தானவர்கள் இருக்கிறார்களாவென கேட்கவும் அவர்கள் ஆமென்று சொன்னார்கள். அப்போது நான் அவர்களிடம் நமது காலத்தில் பர்தானவர்கள் யாராக இருக்குமென்று கேட்டேன். அதற்கு அவர்கள் இந்தகாலத்தில் பர்தானவர்கள் நாயகம் குத்புல் அக்தாப் முஹிய்யத்தீன் அப்துல்காதிறுல்ஜெயிலானீ றலியல்லாகு அன்குவாக இருக்குமென்றுசொல்லவும், அவர்களிடத்தில் நான் அவர்களின் நடபாகத்தைக் குறித்து ஏதேனும் எனக்குச் சொல்லுங்கள் என்றேன். அப்போது அவர்கள், இந்நேரத்தில் ஷெய்கு அப்துல் காதிறு றலியல்லாகு அன்குவாகிறவர்கள் அவ்லியாக்கூட்டத்திற்கெல்லாம் பர்தானவர்கள்; அக்தாபுகளுக்கு குத்புமானவர்

கள்; அல்லாகுதஆலா அவர்களுக்குக் கொடுத்திருக்கிறபதவியைவிட மேலான பதவி எந்த ஒலிமார்களுக்கும் கொடுக்கவில்லை. இன்னும் அவன், முஹப்பத்தென்னும் குடிப்பை, அந்த ஹபீபுகளுக்கு குடிப்பாட்டியதைவிட மேலானதை அவர்களுக்கு குடிப்பாட்டுகிறான். இனி அல்லாகுத் தஆலா தனக்கும் அவர்களுக்குமிடையில் அவனுடைய இரகசியங்களில் நின்றும் சிலஇரகசியங்களை அமானம் வைத்திருக்கிறான். இக்காரணத்தினாலேயே அவர்கள், மற்றும் அவுலியாக்களைவிட ஸப்கத்தென்னும் முந்துதலைக்கொண்டு முந்திவிட்டார்கள். இன்னும் எந்த ஒலிமார்களும் கியாமநாள் பரியந்தம் வருகிற அவுலியாக்களும் அவர்களிடத்தில் தலைசாய்த்து அடிபணிந்து அதபுச்செய்து அவர்களிடமே இல்முகளைப்படித்து வருகிறார்களென்று கிழுரு அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள். என்பதே. (றலியல்லாகு அன்கு)

ஹிக்காயத்து-15.

ஷெய்கு அபூமத்யனில் மக்ரிபி றகிமகுல்லாகு சொல்லுகிறார்கள்: "நான் மூன்று வருடத்துக்குமுன்னால் அபுல் அப்பாஸ் கிழுரு அலைகிஸ்ஸலாமில் நின்று முலாகாத்துச்செய்து பிறகுநான் அவர்களிடம் மஷ்ரிகு தொடுத்து மக்ரிபுவரையிலுமுள்ள மஷாயிகுமார்களுடைய அஹ்வால்களைப்பற்றியும் நாயகம் ஷெய்கு அப்துல்காதிறு ஜீலானி கத்தஸல்லாகு ஸிர்றகு அவர்களைப்பற்றியும் கேட்டபோது அவர்கள், என்னைநோக்கி, 'ஆப் அபுல் மத்யனே! நாயகம் ஷெய்கு அப்துல் காதிறு ஜீலானி றலியல்லாகு அன்குவாகிறவர்கள் ஸித்தீகீன்களுக்கு இமாமானவர்கள்; ஆரிபீன்களுக்கு ஹுஜ்ஜத்தானவர்கள்; மக்ரிபாவென்னும் மெஞ்ஞான இல்முக்குகுருவானவர்கள்; அவர்களின் காரியம் அவுலியாக்களுக்கிடையில் மெத்த வலுப்பமானது. இன்னும் அவர்கள் பதவியானது ஜலம் விரைவாக ஓடும்படியான ஆற்றைப்போல மிகமேலானது. இனி மற்ற அவுலியாக்களுடைய பதவிகளானது அவர்களின் பதவிகளுக்கு தாழ்ந்ததாக இருக்கும்; நானும் அவர்களுடைய இஷாராவைக்கொண்டுதான் அவுலியாக்களுக்கிடையில் அதிகாரத்தை நடத்திவருகிறேன் என்றார்கள். பின்னும் ஷெய்கு அபூமதயனில் மக்ரிபீ றகிமகுல்லாகு சொல்லுகிறது என்னவெனில், கிழுரு அலைகிஸ்ஸலாம் எந்த ஒலிமார்களுடையஹக்கிலும் நாயகம் ஷெய்கு அப்துல்காதிறு ஜீலானி றலியல்லாகு அன்குவின் ஹக்கில் புகழ்ச்சி செய்ததுபோல் ஒருவரையும் புகழ்ச்சிசெய்ய

நான் அவர்களினின்று கேட்கவேயில்லை'யென்று சொன்னார்கள். (றலியல்லாகு அன்கு)

ஹிக்காயத்து-16.

ஷெய்கு உஸ்மான் ஈகிமதுல்லாகு சொல்லுகிறார்கள்: "நான் காமிலான ஷெய்கைக் காணுதற்காகவேண்டி எங்கே போகிறதென்று எனக்கு ஒரு சமாசாரமும் தெரியாமலிருக்கும்போது திடீரென்று ஒரு அழகான மனிதர் என்னிடம் வந்து 'அஸ்ஸலாமு அலைக்க யா உஸ்மான்' என்று ஸலாம் சொன்னார். நான் மறுமொழி சொல்லிவிட்டு அவரிடத்தில் சத்தியம்செய்து, 'நான் உம்மை இதற்குமுன் ஒருபோதும் காணவில்லை; அவ்வாறு இருக்க எவ்வாறு என்பெயர் உமக்கு தெரியவந்தது? நீர் யாராக இருக்கும் என்று கேட்க, அவர் நான் கிலுறு; இந்நேரத்தில் நான் ஷெய்கு அப்துல்காதிறு ஜீலானீ றலியல்லாகு அன்குவிடத்தில் ஹாஜிறாகியிருந்தேன்; அவர்கள் என்னிடம் 'அப்துல்அப்பாஸ அப்பாஸே! நேற்றிரவு ஸரீபன் என்ற வலி ஹுள்ள உஸ்மானு என்னும் பெயருடையவருக்கு அல்லாவில் நின்று ஜத்பு வெளியாகி இருக்கிறதினால் அவரை எதிர்கொண்டழைக்கும்படி நான் ஏவப்பட்டிருக்கிறேன்; இன்னும் வழுவானத்திற்கு மேலே நின்றும் அவரைப்பற்றி (மற்ஹபன் பிதஅபதி) அபேதி ஆப் எனது அடிமையே! உமக்கே சுபசோபனம் என்னும் சத்தம் வந்தது; அவர் அல்லாகுத்தஆலாவினிடத்தில் யாதொரு காமிலான ஷெய்கைக்கொண்டு நேர்வழி காட்டும்படி வரம் கேட்டிருக்கிறார்; ஆனதால கிலுறே நீங்கள் போங்கள்; இடைவழியில் அவரைப் பெற்றுக்கொள்வீர்கள்; அவரை என்னிடம் கூட்டிக்கொண்டு வாருங்கள்' என்று சொன்னார்கள்; ஆதலால் உஸ்மானே ஷெய்கு அப்துல்காதிறுஜீலானீ றலியல்லாகு அன்கு ஆகிறவர்கள் ஆரிபீன்களுக்கு பர் தானவர்கள்; இக்காலத்தி லிருக்கப்பட்டவர்களுக்கு பெருவானவர்கள்; ஆனதினால் நீர் அவர்களுடைய மேன்மைத்தனத்தைத் தெரிந்து அவர்களுக்கு மரியாதை செய்யும்' என்றார்கள். அப்போதே என் உணர்வு நீங்கி ஹாஜிறாயிருந்தபின் பிறகு பார்க்க கிலுறு அலைஹிஸ்ஸலாம் என் கண்ணைவிட்டு மறைவாகி விட்டார்கள். நான் பக்தாதில் வந்திருக்கிறேன். பின்பு நான் எழுநாட்கள்வரையில் அவர்களைப் பார்க்கவில்லை" யென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து-17.

ஷெய்கு அபீ முகம்மது அப்துல்லாஹிப்னு [illegible] றஹிமஹுல் லாகு அன்ஹுவைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கி றது: ஒருநாள் நாயகம் அபுல்அப்பாஸ் றழியல்லாகு அன்ஹு பேசிக் கொண்டிருக்கும்போது அவர்கள் இடையின்று ஆகாயத்தில் பறந்து போய், 'அப்பனே இவ்விடங்களில் சேர்மானமானவரே! இல்லையே; நீர் முன்னெப்பதே அவனில் சேர்மானமானவர் [illegible] என்று சொல்லிவிட்டுத் திரும்பி [illegible]. அப்போது நாங்கள் அவர்களிடத்தில் [illegible] விஷ யத்தைக் குறித்துக் கேட்கவும், அவர்கள் 'அபுல் அப்பாஸ் கிழுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வெகு தீவிரமாக நம்முடைய மஜ்லிஸைக் கடந்துபோனார்கள். அதற்காகவேயன்றி நானவர்களுக்கு இவ்வாறு சொன்னேன்' என்றார்கள். இவ்வகையான ஹிக்காயத்துகள் அநேக மிருக்கின்றன. இவைகளால் அவர்களின் ஹயாத்தும் வைபவமும் என் றென்றும் ஊர்ஜிதமாக [illegible] தெரிய வருகின்றன. அல்லாஹுத் தஆலா அவர்களின் பொருட்டால் இருலோகத்திலும் நம்மெல்லாருக்கும் அருள்புரிவானாக. (ஆமீன் யாறப்பல் ஆலமீன்)

முற்றிற்று.